பக்கங்கள்: 12
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 தை 17 வியாழக்கிழமை 31.01.2019 கதிர் 87

**இனி து ரகசியம் அல்ல!**

அடக்கப்பட்ட ஈழத் தமிழருக் காகக் குரல் எழுப்பி வந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குறித்து எனது இப் பத்தியில் சில மாதங்களுக்கு முன்னர் நான் பிரஸ்தாபித்திருந் தமை வாசகர்களுக்கு நினைவி ருக்கலாம்.

அப்போது அவர் ஏற்கனவே மறைந்து விட்டார் பக்கம் 02

# புதிய அரசமைப்பு ஒருபோதும் வராது

## அடித்துக் கூறினார் அமைச்சர் மனோ



யாழ்ப்பாணம், ஜனவரி 31

புதிய அரசமைப்பு ஒருபோதுமே வராது. அது நடக் காது. அதற்கான காலம் கடந்துவிட்டது.

- இவ்வாறு நேற்று அடித்துக் கூறினார் அமைச் சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரு மான மனோ கணேசன்.

நான் மக்களிடம் உண்மையைச் சொல்லவே விரும்பு கின்றேன். அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை. புதிய அரசமைப்பு வரவே வராது என்றும் அவர் குறிப் பிட்டார். பக்கம் 02

## கீரிமலைப் பிரதேசம் விரைவில் முழுமையாக விடுவிக்கப்படும்

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 31

இராணுவக் கட்டுப்பாட டிலுள்ள வலி.வடக்கு, கீரி மலைப் பிரதேசத்தை முழுமையாக விடுவிக்க விரைவில் பக்கம் 11

## கலப்படத்துக்கு கொண்டு வந்த 7,500 லீற்றர் எத்தனோலும் நிலத்தில் ஊற்றி அழிப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 31

சுன்னாகம், ஏழாலைப் பகுதியில் சாராயத்துடன் கலப் படம் செய்யும் நோக்குடன் பதுக்கி பக்கம் 11

## மன்னார் மனித எலும்புக்கூடுகளின் சோதனை அறிக்கை 2 வாரங்களில்!

கொழும்பு, ஜன. 31

மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும் புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவில் கார்பன் பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டுள்ளன என் றும், இந்த பரிசோதனை அறிக்கை பக்கம் 11

## விக்கி எதிர் டெனிஸ்வரன் வழக்கு இன்று வருகிறது முக்கிய தீர்ப்பு

கொழும்பு, ஜன. 31

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை அவ மதித்தார் எனத் தெரிவித்து வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் பக்கம் 11

## ஞானசாரரை விடுவித்தால் மைத்திரிபால இனவாதி!

### கூறுகின்றார் செல்வம் எம்.பி.



கொழும்பு, ஜன. 31

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும், ஞானசார தேரருக்கு பக்கம் 11

## இனிமேலும் இலங்கை அரசுக்கு கால நீடிப்பு வழங்கவேண்டாம்!

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐ.நாவிடம் கோரிக்கை




வவுனியா, ஜன. 31

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடை முறைப்படுத்த இலங்கை அரசுக்கு மேலும் கால பக்கம் 11

## லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது!

### கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன. 31

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி லஞ்சம் பெற்ற பக்கம் 11

## மகளை வன்புணர்ந்த தந்தைக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறை!

### மட்டக்களப்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு

மட்டக்களப்பு, ஜன. 31

தனது மகளை வன்பு ணர்வுக்குட்படுத்திய தந் தைக்கு 15 ஆண்டுகள் கடூ ழியச் சிறைத் தண்டனை வழங்கி பக்கம் 11

## வருட இறுதியிலேயே ஜனாதிபதித் தேர்தல்!

கொழும்பு, ஜன. 31

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் அல்லது டிசெம்பரிலேயே இடம்பெறவுள்ளதாகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரி வித்தன எனச் சிங்களப் பக்கம் 11

## அனைத்து மாகாண சபைகளுக்கும் நவம்பரில்தான் ஒன்றாகத் தேர்தல்!

### அதுதானாம் ஐ.தே.க. தலைமையின் திட்டமாம்

கொழும்பு, ஜன. 31

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கொண்டு வரப்பட்ட அமைச் சரவைப் பத்திரத்துக்கு அமைவாக மாகாண சபைகளுக்கான தேர்தல் களை எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீ காரம் வழங்கியதாயினும் – பக்கம் 11

## சுதந்திர தின விழாவில் பங்கேற்கார் மஹிந்தர்!

கொழும்பு, ஜன. 31

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சுதந்திர தின விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பங் பக்கம் 02

## கைப்பற்றப்பட்ட 165 படகுகளில் 48 மட்டும்தான் நல்ல நிலையில்!

### அவற்றை மீட்டது இந்திய மீனவர் குழு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 31

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் பக்கம் 02

# கூட்டுக் களவாணிகளுக்கு அங்கீகாரமளித்தார் ரணில்

## அரசில் நீடிப்பதா? விலகுவதா? முடிவு நாளை என்கிறார் மனோ

யாழ்ப்பாணம், ஜன. 31

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது கூட்டுக்களவாணியான இ.தொ.கவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைலாகு கொடுத்து அங்கீகாரமளித்தமை வருத்தத்துக்குரியது. நாளை முதலாம் திகதி அவருடன் நடத்தவுள்ள பேச்சின் பின்னர் இந்த அரசில் நீடிப்பதா அல்லது விலகுவதா என்பது குறித்து தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்க்கமான முடிவெடுக்கும்.

– இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் மனோ கணேசன் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியலயம் ஆகியன இணைந்து நடத்திய மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

இதன் பின்னர் காலைக்கதிருக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தான விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இ.தொ.கவுடன் இணங்கிச் செயற்பட்டார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் கேட்டபோதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கம், தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி என மூன்று அமைப்புக்கள் உள்ளன. இந்த மூன்று அமைப்புகளும்தான் தோட்ட நிறுவனங்களுடன் கலந்துபேசி கூட்டு ஒப்பந்தத்தைக் கையெழுத்திடுகின்றார்கள். நாங்கள் அதில் இல்லை. நாங்கள் எப்போதும் கூட்டு ஒப்பந்த முறைக்கு எதிர்ப்பு வெளியிட்டு வந்திருக்கின்றோம். கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து வெளியே வந்தால்தான் தோட்டத் தொழிலாளர்களுக்கு விடிவு கிட்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் பிரதான கட்சியாக இருக்கின்றது. இந்த அரசு ஐ.தே.கவுக்குச் சொந்தமான அரசல்ல. இந்த அரசில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய போன்ற பல கட்சிகள் உள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் இப்போது வெறும் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய காட்டிக் கொடுப்பு. கூட்டுக் களவாணிகள் செய்த வேலை. இந்தக் கூட்டுக் களவாணிகளுடன் நாங்கள் உடன்பட முடியாது.

எமது நிலைப்பாட்டை நாளை முதலாம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசும்போது தெளிவாகத் தெரிவிப்போம். ஒக்ரோபர் சூழ்ச்சியின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியான நாம் இந்த அரசுக்குப் பெரும் பங்களிப்பை வழங்கி அவர்களைக் காப்பாற்றியிருக்கிறோம்.

ஆனால் இ.தொ.க. என்ற கூட்டுக் களவாணிக் கட்சியுடன் சேர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைலாகு கொடுத்து அவர்களை அங்கீகரித்தமை எமக்கு மிகவும் மன வருத்தத்தைத் தருகின்றது.

நாளை நடைபெறவுள்ள பேச்சின் பின்னர் நாங்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்போம் – என்றார். (ஐ)

# சிங்கப்பூரில் நிதிச் சேவைகளுக்கு ஆலோசகராக அர்ஜுன மகேந்திரன்

சிங்கப்பூரில் தொடர்ந்தும் பல நிதிச் சேவைகளுக்குத் தாம் ஆலோசகராக செயற்பட்டு வருகின்றமையை முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அர்ஜுன மகேந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி ஊழல் தொடர்பாக தேடப்பட்டு வரும் முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அர்ஜுன மகேந்திரன் தென்னாபிரிக்கப் பத்திரிகையொன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அந்தச் செவ்வியில், தான் தொடர்ந்தும் சிங்கப்பூரில் பல நிதிச் சேவைகளுக்கு ஆலோசகராகச் செயற்பட்டு வருவதை உறுதி செய்துள்ள அவர், மத்திய கிழக்கு நாடுகளில் முதலீடு தொடர்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை அர்ஜுன மகேந்திரன் இருக்கும் இடம் தெரியாது என இலங்கைப் பொலிஸார் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேற்கமாட்டாரென உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேகச் செயலாளர் உதித் லொக்குபண்டார இது தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்துள்ளார் எனவும் அவர் கூறினார்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் அவருக்கான அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

### புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் மனோ கணேசன் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியலயம் ஆகியன இணைந்து நடத்திய மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

இதன் பின்னர் காலைக்கதிருக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த அரசமைப்பு வரவேண்டும் என்ற உறுதிப்பாட்டில் நான் எப்போதுமே இருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனைப் போன்று இந்த அரசமைப்பு வரவேண்டும் என்ற உறுதிப்பாடு என்னிடம் இருக்கிறது.

ஆனாலும் நான் மக்களிடம் உண்மையைச் செல்ல விரும்புகின்றேன். வழிகாட்டல் குழுவுக்குள் இருக்கும் சூழல் நன்றாக இல்லை. ஆகவே இந்த அரசமைப்பு வராது என்று இரு வருடங்களுக்கு முன்பே சொன்னேன். ஆனால் அதனை யாரும் கேட்கவில்லை. நான் அன்று சொன்னது இன்று சரியாக இருக்கின்றது – என்றார். (ஐ)

### கைப்பற்றப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டுவரை இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் 165 படகுகளில் நல்ல நிலையில் இருந்த 48 படகுகளை இந்திய மீட்புக் குழுவினர் மீட்டுச் சென்றுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் பலர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களது படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மட்டும் இந்திய மீனவர்களின் 165 படகுகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட படகுகள் நீதிமன்ற உத்தரவிற்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்கவேண்டுமென இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கமைய இரண்டு நாடுகளும் அரசுகளும் பேசியிருந்தன. நல்லிணக்க அடிப்படையில் அந்தப் படகுகளை விடுவிப்பதற்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை மீட்பதற்கு இந்தியாவின் இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கத் தலைவர் தலைமையில் படகு மீட்புக் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்த இந்தப் படகு மீட்புக் குழுவினர் இங்கு தங்கியிருந்து வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பல்வேறு இடங்களுக்கும் சென்று தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படகுகளைப் பார்வையிட்டனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 165 படகுகளில் 48 படகுகள் மாத்திரமே நல்ல நிலையில் இருப்பதை அவர்கள் அவதானித்தனர். அதற்கமைய அந்த 48 படகுகளையும் படிப்படியாக இரண்டு வாரங்களுக்குள் மீட்டுள்ளனர். இவ்வாறு அந்த 48 படகுகளையும் மீட்டுக் கொண்டு படகு மீட்புக் குழுவினர் நேற்று தமிழகத்துக்குச் சென்றுள்ளனர். (ஐ-07)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என முதல் நாள் இப்பத்தியில் நான் தவறாகக் குறிப்பிட்டிருந்தமையையும், நேயர் ஒருவர் தொடர்பு கொண்டு அப்பிழையைச் சுட்டிக்காட்டியமையை அடுத்து நான் அதனை அடுத்த நாள் திருத்திப் பிரசுரித்திருந்தமையையும் கூட வாசகர்கள் நினைவில் வைத்திருக்கக் கூடும்.

இப்போது அவர் உண்மையில் மறைந்து விட்டார். அவரின் மறைவை ஒட்டி தமிழ் ஊடகங்கள் பலவும் செய்திகள், கட்டுரைகள், தகவல்களை வெளியிட்ட வண்ணம் உள்ளன.

இந்தியாவுடன் தொடர்புபட்ட ஈழத்தமிழர் விடயங்களில் நன்கு பரிச்சயமானவரான மறவன் புலவு க.சச்சிதானந்தனும் கூட ஜோர்ஜ் பெர்னாண்டஸின் மறைவை ஒட்டித் தனது மனப்பதிவு களை நெஞ்சைத் தொடும் விதத்தில் ஒரு நினைவுரையாகக் கொட்டித் தீர்த்திருந்தார்.

எனினும், அந்த நினைவுரையில் ஓரிடத்தில் ஏற்பட்ட தவறை நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு சுட்டிக்காட்டினார். அதைத் திருத்தி, பதிவுகளை நேர் சீராக்க வேண்டிய பொறுப்பு எனக்கிருப்பதாக அந்த நண்பர் குறிப்பிட்டார். அதனால் அதனை நேர் சீர் செய்ய முயல்கிறேன்.

*“இந்தியப் படைகளை மீளழைக்க வேண்டும் என்ற தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் குரல் 1989ஆம் ஆண்டு ஆனியில் (ஜூனில்) ஓங்கி ஒலித்த நாள்களில், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அண்டன் பாலசிங்கம், ஜோர்ஜ் பெர்னாண்டஸுடன் தொடர்பு கொண்டார். இந்தியப் படைகள் விலகினால் விடுதலைப் புலிகளைப் பிரேமதாசா அழித்து விடுவார் எனக் கூறினார். பாலசிங்கத்தை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கமுக்கமாகச் சந்தித்ததாகவும் செய்தி உண்டு. இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்தவும் கேட்டுக் கொண்டார்.”*

–இப்படித் தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார் மறவன் புலவு சச்சிதானந்தன்.

இது தொடர்பில் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

★ எனக்குத் தெரிந்த வரையில் – நான் அறிந்த வரையில் – இந்தியப் படைகள் ஈழத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தமையையோ, அங்கு நிலை கொண்டிருந்தமையையோ விடுதலைப் புலிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். அங்கீகரித்தவர்களும் அல்லர். தமிழர் தாயகத்தை விட்டு இந்தியப் படைவெளியேற வேண்டும் என்பதே எப்போதும் அவர்களது நிலைப்பாடாக இருந்தது. அதன் ஓர் அங்கமாகவே இரத்தம் சிந்தி, உயிரைக் கொடுத்து இந்தியப் படைகளுடன் அவர்கள் போராடினார்கள். அந்த நிலைப்பாட்டுக்கு மாறாக, இலங்கையிலிருந்து இந்தியப்படைகள் விலகக்கூடாது என பாலசிங்கம் தெரிவித்திருப்பார் என்ற தகவல் எனக்குப் புதுமையாக உள்ளது.

★ 1989 ஜனவரியில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிரேமதாசா, அந்த ஆண்டு சித்திரைப் புத்தாண்டை ஒட்டி ஓர் அறிவிப்பை விடுத்தார். புலிகளுக்கும், இலங்கை அரச படைகளுக்கும் இடையில் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அந்த அறிவிப்பில் அவர் பிரகடனப்படுத்தினார். இந்தியப் படையையும் அமைதி பேணுமாறு அவர் கோரினார்.

பிரேமதாசாவின் அந்த அறிவிப்புக்கு பதிலாகப் புலிகள் பகிரங்கக்கடிதம் ஒன்றை வெளியிட்டனர்.

*“ஒடுக்குமுறையில் ஈடுபட்டிருக்கும் இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு அகலும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை”* – என்று பிரேமதாசாவின் போர் நிறுத்த அறிவிப்பைப் புலிகள் நிராகரித்தனர்.

புலிகளின் இந்தக் கடிதத்தின் உட்கருத்தையும் அவர்களின் கடுப்பையும் காரத்தையும் புரிந்து கொண்ட ஜனாதிபதி பிரேமதாசா அடுத்த நாள், கொழும்பில் பௌத்த ஆலயம் ஒன்றில் நடைபெற்ற ஒரு பகிரங்க நிகழ்வில் வைத்து இலங்கையை ஆக்கிரமித்து நிற்கும் இந்திய இராணுவம் மூன்று மாதத்துக்குள் முற்றாகத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற காலக் கெடுவுடனான அறிவிப்பை விடுத்தார்.

அதையடுத்து, பிரேமதாசா அரசு – புலிகள் சமரசப் பேச்சு இடம்பெற்றமை அதன்பின் கட்டவிழ்ந்த விடயம்.

இந்தப் பேச்சில் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் அணியை வன்னியில் இருந்து கொழும்புக்குக் கூட்டி வருவதற்காக 1989 மே 3ஆம் திகதி கொழும்பிலிருந்து ஹெலிக் கொப்டர் அணி ஒன்றில் பாலசிங்கம் தம்பதியர் வன்னிக்குப் பறந்து சென்று புலிகள் பிரதிநிதிகளுடன் கொழும்பு திரும்பியமை வரலாறு.

அதன் பின்னர், பல மாதங்கள் கொழும்பில் தொடர் பேச்சுகள் நடந்தன. பேச்சுகளின் முதல் – பிரதான – பேசு பொருளாக இருந்தது இலங்கையிலிருந்து இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்புவது எங்ஙனம் என்பது தான். இந்த விடயத்தில் கொழும்பு அரசு, புலிகள் ஆகிய இருதரப்பினருமே தீவிரமாக இருந்தார்கள் என்பது அந்தப் பேச்சுக்களின்போதும் கூடப் பக்கத்திலிருந்து செய்தி சேகரித்த எனக்கு நன்கு தெரியும்.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்ட பாலா அண்ணன், யோகி போன்றோருடன் அவர்கள் தங்கியிருந்த கொழும்பு ஹோட்டலில் நான் மணிக்கணக்கில் பேசும் வாய்ப்பும் பெற்றிருந்தேன்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையிலிருந்து இந்தியப் படையை வெளியேற்றுவதே அவர்களின் பிரதான – முதலாவது – இலக்காக இருந்தது.

மறவன்புலவு சச்சிதானந்தன் இப்போது குறிப்பிடுகின்றமை போல 1989 ஜூனில், மதியுரைஞர் பாலசிங்கம் ஜோர்ஜ் பெர்னாண்டஸுடம் தொடர்பு கொண்டாரா என்பது எனக்குத் தெரியாது. அதை ஏற்கவோ, மறுக்கவோ என்னிடம் ஆதாரம் ஏதும் இல்லை.

ஆனால், இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து வெளியேற்றும் தீவிர முயற்சியை ஒரே இலக்காகப் புலிகளும், அவர்கள் சார்பில் மதியுரைஞர் பாலசிங்கமும் கொண்டு செயற்பட்ட அந்தச் சமயத்தில் “இந்தியப் படைகள் விலகினால் விடுதலைப் புலிகளைப் பிரேமதாசா அழித்து விடுவார் என ஜோர்ஜ் பெர்னாண்டஸைத் தொடர்பு கொண்டு பாலசிங்கம் கூறினார்” – என்று குறிப்பிடுவது ஏற்புடையதாக எனக்குப் படவில்லை.

இன்னும், கொஞ்சம் கொச்சையாகக் கூறுவதானால், பிரேமதாசாவிடமிருந்து புலிகளுக்கு ஆயுத விநியோகத்தை மேற்கொள்ள வைத்து, அந்த ஆயுதங்கள் மூலம் இந்தியப் படைகளைப் புலிகள் இராணுவ ரீதியில் எதிர்கொள்ளச் செய்யும் கைங்கரியத்தைக் கனகச்சிதமாக ஒப்பேற்றிக் கொண்டிருந்த பாலசிங்கம், அந்தச் சமயத்தில் அப்படி ஜோர்ஜ் பெர்னாண்டஸிடம் கூறியிருப்பார் என்று கூறுவது ஏற்புடையதா என்பதை வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

- மின்னல் -

# சிறுமி துஷ்பிரயோக வழக்கில் சந்தேகநபருக்கு பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

பதின்ம வயதுச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்துவது பாரதூரமான குற்றம். அவ்வாறான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவரை விசாரணைகள் நிறைவடைவதற்குள் பிணையில் விடுவிப்பது ஏற்புடையது அல்ல என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி. போல் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றில் முற்படுத்திய சந்தேகநபரை பிணையில் விடுவிக்க முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை நிராகரித்து விளக்கமறியல் உத்தரவு வழங்கியபோதே நீதிவான் இதனைச் சுட்டிக்காட்டினார்.

கொக்குவில் பகுதியில் குடும்பப் பெண் ஒருவருடன் முறையற்ற உறவை வைத்திருந்த வான் சாரதி ஒருவர், அந்தப் பெண்ணின் பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தினார் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. அந்தப் பெண்ணிடமிருந்து விவாகரத்து பெற்ற பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை இந்த முறைப்பாட்டை வழங்கினார்.



அதனடிப்படையில் தாயாரின் பாதுகாப்பிலிருந்த சிறுமியை மீட்ட பொலிஸார், அவரைச் சட்ட மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்தினர். அத்துடன் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவையும் பொலிஸார் இந்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பெற்றிருந்தனர். எனினும் சந்தேகநபர் இந்தியாவுக்குச் சென்றிருந்ததால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

இந்நிலையில் சந்தேகநபர் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அவரது உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்குக்கு வந்துள்ளமையைப் பொலிஸார் அறிந்து கொண்டனர். அதனையடுத்து சந்தேகநபர் வான் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது கைது செய்ததுடன் அவரது வானையும் கைப்பற்றினர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த சிறுமியைப் பாலியல் பலாத்காரத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டின் கீழான முதல் அறிக்கையின் கீழ் அவர் மன்றில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா முன்னிலையானார். சந்தேகநபர் சார்பில் அவர் பிணை விண்ணப்பத்தை முன்வைத்தார். சந்தேகநபருக்கும் இந்தக் குற்றச்சாட்டுக்கும் தொடர்பில்லை. அவர் சிறுமியைத் தாயாரின் அனுமதியுடனேயே 3 தடவைகள் வெளியில் அழைத்துச் சென்றார். அதனால் சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்று மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா கூறினார்.

சந்தேநபர் சார்பான பிணை விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், பதின்ம வயதுச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்துவது பாரதூரமான குற்றம்.

அது சமூகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவம். அத்துடன், சந்தேகநபருக்கு எதிரான குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முடிவுறுத்தவில்லை. அதனால் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்டி சந்தேநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-07)

# புலிகளுக்காகவே புதிய அரசமைப்பு

## சாடுகின்றார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜன. 31

வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலிகளின் தேவைக்காகவே புதிய அரசமைப்பைக் கொண்டுவரப்படுகின்றது என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சதித்திட்டத்தை முறியடிக்காவிட்டால் நாட்டைப் பாதுகாக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.



மினுவாங்கொட பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பூமி இளைஞர், யுவதிகளுக்கு புதிய இடமல்ல. இதில் பல இளைஞர்கள் போராடி மடிந்துள்ளனர்.

அந்தவகையில் 1988- 1989 காலப் பகுதியில் கலவரத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர், யுவதிகளை அதிலிருந்து திசை திருப்பி நல்வழிபடுத்தியவர் எனது தந்தை .

அப்போது எனது தந்தையுடன் சேர்ந்து கம்பஹா மாவட்ட பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்களை அழைத்து வந்ததுடன் அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்துள்ளோம்.

அத்தகைய சிறந்த பூமியே இலங்கையாகும். ஆனால் தற்போது மணி, யானை, புலி ஆகிய சின்னங்களைக் கொண்ட கட்சிகளே நாட்டை நாசமாக்கின்றன.

நாட்டின் நலனுக்காக கொண்டுவரப் படவுள்ளதாகக் கூறப்படும் புதிய அரசமைப்பு விடுதலைப் புலிகளின் தேவைப்பாடாகும். இதற்கு மக்கள் விடுதலை முன்னணியும் உடந்தையாக இருக்கின்றது.

ஆகையால் இந்தச் சதித்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவராவிடின் நாட்டைப் பாதுகாக்க முடியாது. இதனால் இளைஞர், யுவதிகளும் இவைகளைக் கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும்- என்றார். (ஐ)

# அமைச்சர் மனோ கணேசனுக்கு கரவெட்டியில் நேற்று வரவேற்பு





யாழ்ப்பாணம், ஜன. 31

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசனைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர் பல்வேறு இடங்களுக்கும் சென்று பல நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு கரவெட்டிப் பிரதேச சபையில் பிரதேச சபைத் தவிசாளர் ஐங்கரன் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது அமைச்சர் மங்கள வாத்தியங்களுடன் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# ரவிராஜின் மனைவியின் மனு ஏப்ரல் மாதம் விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 31

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுதலை செய்யக் கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு தெரிவித்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மனைவியான சஷிகலா ரவிராஜினால் இந்த மீள்பரிசீலனை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, அச்சல வெங்கப்புலி ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான கடற்படை கமாண்டர் பிரசாத் ஹெட்டிஆராச்சி சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது தான் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதால், சட்டத்தரணி ஒருவரை முன்னிலைப்படுத்துவதற்கு தனக்கு 2 மாதங்கள் கால அவகாசம் பெற்றுத்தரவேண்டுமென பிரதிவாதியான பிரசாத் நீதிமன்றில் கோரினார்.

இதற்கமைய மேன்முறையீட்டு மனுவை ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தீர்மானித்தனர். (ஐ)

# காணாமற்போனோர் விடயத்தில் தலையிடவேண்டும் அமெரிக்கா

## வலியுறுத்திக் கையெழுத்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இலங்கையில் நீதி கிடைக்காத நிலையில், வவுனியாவில் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அமெரிக்கா இந்த விடயத்தில் தலையிடவேண்டும் எனக் கோரிக் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கிருஸ்ணன் ராஜ்குமார் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெப்ரவரி மாதம் எமது சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தின் 2 வருட பூர்த்தி வரும் நாளில் எமது கையெழுத்துச் சேகரிப்பை ஆரம்பிக்கவுள்ளோம். காணாமற்போன பிள்ளைகளைக் கண்டு பிடிக்க உதவுவதற்கு, அமெரிக்கா மட்டுமே காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டுபிடிக்கச் சிறந்த அறிவாற்றல் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது, சிறந்த உபகரணங்களைக் கொண்டுள்ளது, பல கஷ்டமான இடங்களை அடைவதற்குப் போக்குவரத்து வசதிகளை கொண்டுள்ளது.

அமெரிக்கர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் உலகத் தலைவர்கள். அவர்களை நாம் கேட்டுக் கொண்டால், நிச்சயமாக அவர்கள் இங்கே வருவார்கள். அவர்கள் உலகில் மிகசக்தி மிக்கவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இல்லாமல் இந்த உலகில் எதுவும் அசையாது மட்டுமல்ல ஒன்றுமே நடக்காது. அவர்கள் மனித உரிமை ஆதரவாளர்கள்.

வடக்கில் எமது பெரும்பான்மையை இழக்க நேரிடும், சிங்கள அரசால் அழிக்கப்படுகிறோம். கிழக்கில் தமிழர்கள் முஸ்லீம்களாக மாற்றப்படுகிறார்கள். சிங்களக் குடியேற்றங்கள் நடந்து வருகின்றன.

சிங்கள, புத்த அடையாளங்கள் தமிழர் தாயகத்தில் பரவி வருகின்றன. எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பணம் மற்றும் சலுகைகளுக்கு விலை போயுள்ளனர்-என்றார். (ஐ).

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கோட்டா வேட்பாளர் என்றால்...?

இது தேர்தல் ஆண்டாக அமையலாம் என ஊடகங்களில் கூறப்படுகின்றது. பெரும்பாலும் மாகாண சபை தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்ற ஒழுங்கில் தேர்தல்கள் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எது, எப்படியோ இன்னும் 10 மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடக்கும். அது முற்கூட்டி நடத்தப்படலாமே தவிர, 10 மாதங்கள் தாண்டி பிற்போடப்பட முடியாது.

அத்தேர்தலில் மொட்டுக் கட்சிக்காரர்கள் தரப்பில் களமிறங்குவதற்கு கேட்டாபய ராஜபக்ஷ தயாராகி வருகின்றார் என்று கூறப்படுகின்றது. அவரது இரட்டைப் பிராஜவுரிமைகளில் ஒன்று அமெரிக்காவுக்கானது. ஜனாதிபதித் தேர்தலில் அவர் குதிப்பதாயின் அந்த அமெரிக்கப் பிரஜாவுரிமையை அவர் விலக்கிக் கொள்ள வேண்டும். அதற்காக அவர் விண்ணப்பித்து விட்டார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், அவர் அப்படி சுலபமாக அமெரிக்கப் பிராஜவுரிமையை விலக்கிக் கொள்ள அமெரிக்கா அனுமதிக்குமா என்பது தெரியவில்லை.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனி உரிமை மீறல்கள் தாராளமாக இடம்பெற்றன என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நியமித்த நிபுணர் குழு தனது விசாரணையின் பின் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இந்தக் குற்றங்களுக்கு அச்சமயம் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்ஷ பொறுப்பானவரா என்பது தொடர்பில் எத்தகைய திட்டவட்டமான தீர்ப்புகளோ அறிக்கைகளோ இல்லை. எனினும் இடம்பெற்ற எந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அத்தகைய குற்றங்களைத் தராளமாக இழைப்பதற்கான சூழல் நிர்வாக ரீதியாக அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்ற விடயங்களில் கட்டளை ஒழுங்கின்படி (Chain of Command) பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவே பிரதான சூத்திரதாரி என்பது தமிழர் தரப்பில் – குறிப்பாக புலம் பெயர் அமைப்புகளினால் – சுமத்தப்படும் குற்றச்சாட்டு.

தனது பிரஜையாக இருக்கும் ஒருவர் மீது இத்தகைய யுத்தக் குற்றச்சாட்டுகள் சர்வதேச ரீதியில் சுமத்தப்பட்டிருக்கையில், அக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் தம்மை சுத்தவாளியாக அவர் நிரூபிக்க முன்னர், அவர் தனது நாட்டின் பிராஜவுரிமையைத் துறப்பதற்கு அமெரிக்கா அனுமதிக்குமா என்பது சில தரப்புகளின் கேள்வி.

அதேசமயம், எந்த மன்றிலும் அல்லது நீதி ஆயத்திலும் கோட்டபாயவுக்கு எதிராக நேரடியாக யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்படாத நிலையில், பிராஜாவுரிமையைத் துறக்கும் அவரது விண்ணப்பத்தை அவருக்குச் சாதகமாக அமெரிக்க பரிசீலித்து முடிவெடுப்பதற்குத் தடை ஏதும் கிடையாது என வேறு சில வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – பொதுஜன பெரமுன கூட்டின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ஷதான் என்றால், அது ஒன்றே போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு – ஐ.தே.கட்சி வேட்பாளரை ஆதரிப்பதற்குக் காரணம் காட்டுவதற்கு.

இந்த விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு ஆற, அமர சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். ஏனைய தமிழர் தரப்புகளோடு – எத்தகைய அரசியல் வேறுபாடு இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்துவிட்டு – நேர்மையான கலந்துரையாடலில் அது ஈடுபட வேண்டும்.

வெறும் 'கம்பரெலிய' திட்டங்கள் மூலம் ரணில் அரசு தரும் நிதியை தொகுதிகள் தோறும் தாங்களும் முன்னின்று செலவிட்டு, அது தொடர்பான திறப்பு விழாக்களை ஆரவாரமாகச் செய்து விட்டு, அதை நம்பித் தேர்தலையும், மக்கள் வாக்களிப்பையும் எதிர்கொள்ளலாம் எனக் கூட்டமைப்பினர் நம்புவார்களாயின் அவர்கள் நிச்சயம் ஏமாந்துதான் போவார்கள்.

புதிய அரசமைப்பு மூலம் தீர்வு காணும் முயற்சி படுத்துவிட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றும் எத்தனம் பிசுபிசுத்துப் போய் விட்டது.

அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு தீர்வுகாணும் விடயம் கிணற்றில் போட்ட கல் என்ற நிலைமையாகி விட்டது.

காணாமல் போனோர் விவகாரம் வெறும் அலுவலகம் அமைக்கப்பட்டதுடன் அடங்கி விட்டது.

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு, வடக்கு – கிழக்கில் இராணுவ மயமாக்கல் தீவிரத்தைக் குறைத்தல் எல்லாம் திருப்தி தரும் நிலையை எட்டவேயில்லை.

இந்தச் சூழலில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவே களமிறங்கி, அவரைத் தமிழர் தரப்பு தீவிரமாக எதிர்த்த நிலையில், அவர் வெற்றி பெறுவாராயின், நிலைமை இன்னும் மோசமாகும். மஹிந்தவின் ஆட்சிக் காலத்தை விட மிகமிக மோசமானதாக அது அமையும்.

'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலைக்குத் தள்ளப்படும் ஆபத்து தமிழருக்கு நேரும்.

அத்தகைய நெருக்கடி தமிழருக்கு தாங்கவே முடியாத கஷ்டங்களையும், சொல்லொணாத் துயரங்களையும், பெரும் அரசியல் பின்னடைவுகளையும், மீளவே முடியாத களநிலைப் பாதிப்புக்களையும் தரும்.

இத்தகைய நெருக்கடி குறித்து வரமுன் சிந்தித்து, சாணக்கிய தந்திரோபாயத்தோடு அரசியல் காய் நகர்த்தல்களை நேரத்துடனேயே ஆரம்பிப்பது தமிழர் தலைவர்களின் கடமையாகின்றது.

# பாதிக்கப்பட்ட எமது மக்கள் தொடர்பிலும் அரசு கரிசனையுடன் செயற்படவேண்டும்

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



பாதிக்கப்பட்ட எமது இடங்கள் முழுமையாக கட்டமைக்கப்படவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் முழுமையாகக் கிடைக்கவும் உரிய வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் நிதி ஒதுக்கீட்டில், மக்கள் நலன் காப்பகத்தால் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு – வண்ணாங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

முழுமையாக எல்லோருடைய தேவைகளும் நிறைவேற்றப்பட்டிருந்தால், அதாவது பொருளாதார ரீதியாகவும் சரி அல்லது ஏனைய விடயங்கள் என்றாலும் சரி முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தால் கடந்த காலத்தில் யுத்தமே இடம்பெற்றிருக்காது.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு ஒன்பதாண்டுகாலம் நிறைவு பெற்ற நிலையில்கூட இன்னும் எங்களுடைய தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் உண்மை.

அந்தவகையில்தான் படிப்படியாக எங்களுடையவர்கள், எங்களுடைய தலைவர்கள் இதற்காக பல விடயங்களிலும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கில் குறிப்பாக முல்லைத்தீவு மிக மோசமாக அழிக்கப்பட்ட ஒரு மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அடுத்தது கிளிநொச்சி மாவட்டமாகும்.

இந்த வகையில் எங்களுடைய கட்டுமானங்களோ, ஏனைய விடயங்களோ முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் மக்களுடைய வாழ்வாதார நிலைமைகளிலும் நல்லதொரு திருப்தி இன்று வரை ஏற்படுத்தப்படவில்லை.

இந்தவகையில் எந்தெந்த வாய்ப்புக்கள் கிடைக்கின்றதோ அந்தந்த வாய்ப்புகளினூடாக ஒருசில வீதிகளையும், ஒருசில கட்டுமானப் பணிகளையும், அதேபோன்று ஒருசில வாழ்வாதாரத்திற்கான உதவிகளையும், ஒருசில உலருணவுப் பொதிகளையும் எங்களுடையவர்கள் தங்களுடைய முயற்சிக்கேற்ப ஒவ்வொரு இடங்களுக்கும், எங்கெங்கு பெற்றுக்கொள்ளமுடியுமோ அங்கங்கு பெற்று வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையிலே எங்களுடைய பாதிக்கப்பட்ட இடங்கள் முழுமையாக கட்டமைக்கப்படவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் முழுமையாகக் கிடைக்கவும் உரிய வழிவகைகளை அரசாங்கம் முழுமையாகச் செய்யவேண்டும். – என்றார்.

*(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)*

## மாணவி வித்தியா படுகொலை வழக்கின்

# சந்தேகநபரை தப்புவித்த விவகாரம்: வழக்கை விரைவுபடுத்துமாறு உத்தரவு

புங்குடுதீவு,ஜன.31

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் பிரதான சந்தேகநபரை விடுவித்தமை தொடர்பாக முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு எதிரான வழக்கில் விசாரணைகளை விரைவுபடுத்துமாறு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணை அறிக்கையொன்றை தாக்கல் செய்தனர்.

வழக்கு இலக்கம் NP/1/22/15 என்ற வழக்கின் கீழேயே இந்த விடயம் விசாரணை செய்யப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து இவ் வழக்கில் சந்தேகநபரான முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி துசித் ஜோன்தாசன் இந்தக் குற்றப் புலனாய்வு பிரிவரின் மேலதிக அறிக்கை தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தார்.

அதாவது குற்றப் புலனாய்வு பிரிவினர் சமர்ப்பித்த வழக்கு இலக்கம் வித்தியா படுகொலை வழக்கு இலக்கம் எனவும் , அவ் வழக்கு விசாரணை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த வழக்கின் சந்தேகநபராக முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் 2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15ஆம் திகதியே கைது செய்யப்பட்ட ார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக சரியான தகவலை மன்றுக்கு தெளிவு படுத்துமாறும்,வழக்கு விசாரணைகளை துரிதப்படுத் துமாறும் குற்றப் புலனாய்வு பிரி வினருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் உத்தரவிட்டார்.

(ஏ)

# கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் ஜயசிங்கம் நியமனம்



திருகோணமலை,ஜன.31

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆனைக்குழுவின் தலைவராக கிழக்கு பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் தங்கமுத்து ஜயசிங்கத்தை கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஹிஸ்புல்லாஹ் நேற்று நியமித்துள்ளார்.

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு நியமனங்களை வழங்குதல் , இடமாற்றங்களை செய்தல் , உயர் பதவிகளுக்கு நபர்களை நியமித்தல் உட்பட அரச சேவைகளுடைய சகல நியமனங்களுக்கும் பொறுப்பான அதி உயர்சபையாகும். இந்தச் சபையின் தலைவராக பேராசிரியர் தங்கமுத்து ஜயசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் தங்கமுத்து ஜயசிங்கம் மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தை சேர்ந்தவர். கிழக்கு பல்கலைக்கழகத்தில் உப வேந்தராக இருந்து கடமையாற்றிய நீண்ட கால அனுபவமிக்கவர் , அவரை கிழக்கு ஆளுநர் ஆணைக்குழுவின் தலைவராக நியமித்துள்ளார்.

இதுவரைகாலமும் இந்த ஆணைக்குழுவின் தலைவராக கொழும்பை சேர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஜயதிலக்க இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஏ)

## நாளை

**01.02.2019**
**வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம்: மூலம் மு.இ 11.41 வரை
திதி : துவாதசி மு.இ 9.45 வரை
சுபநேரம் : 6.36 – 8.06 வரை
இராகுகாலம் : 11.06 – 12.36 வரை

# முல்லைத்தீவில் இறங்குதுறை அமைக்க தெரிவு செய்யப்பட்ட இடங்கள் பார்வை

முல்லைத்தீவு ,ஜன.31

முல்லைத்தீவு மாவட்டத்தில், கடற்றொழில் அமைச்சினால் ஏற்கனவே இறங்குதுறைகள் அமைக்கவெனத் தெரிவுசெய்யப்பட்ட இடங்கள் பார்வையிடப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சின் இறங்குதுறை நிர்மாணிக்கும் பிரிவின் பணிப்பாளர் ரணவீர–பிர பாத், அவரது குழுவினர் இணைந்தே இவ்வாறு இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.



மேலும் 'வடமாகாணத்தின் நிலைபேறான மீன்பிடி அபிவிருத்தி' என்றதிட்டத்தினுடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் கடற்றொழில் அமைச்சு வடக்கில் துறைமுகங்கள் மற்றும், இறங்குதுறை போன்றவற்றை அமைக்கவுள்ளது.

அந்தவகையில் புவியியல் ரீதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் துறைமுகம் அமைப்பதற்குரிய இடங்கள் இல்லாதநிலையில் இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள் அதனோடு இணைந்த மீனவர்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மீன் ஏல விற்பனை நிலையங்கள், வலை திருத்தும் நிலையங்கள், இயந்திரங்கள் மற்றும் எண்ணெய்க்கான பாதுகாப்பு அறை, ஆண், பெண் மலசலகூடம், சிறிய வெளிச்சவீடு, தண்ணீர் தாங்கி, கிணறுகள், உள்ளக வீதிகள், சந்தை போன்றவையும் இத் திட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக படகுகளைக் கொண்ட துறைகளான கொக்கிளாய், சிலாவத்தை, தீர்த்தக்கரை, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, இரணைப்பாலை, மாத்தளன் ஆகிய இடங்கள் ஏற்கனவே இறங்குதுறை நிர்மாணிக்கும் பிரிவினரால் தெரிவுசெய்யப்பட்ட நிலையில், கடந்த திங்கட்கிழமை அந்த இடங்கள் பார்வையிடப்பட்டதுடன், அந்தந்தப் பகுதிக்கடற்றொழிலாளர்களுடன் அந்தத் திட்டம்பற்றி கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

அத்துடன் இந்த பார்வையிடும் பணிகளில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா – ரவிகரன், மாவட்ட கடற்றொழில் உத்தியோகத்தர்களான பா.ரமேஸ்கண்ணா, க.கணேஸ் வரன் ஆகியோருடன் கடற்றொ ழிலாளர்களும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஏ)

## மாவீரர்களின் பெற்றோருக்கு உணவுப் பொதிகள் வழங்கல்

முல்லைத்தீவு,ஜன.31

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் நிதி ஒதுக்கீட்டில், மக்கள் நலன் காப்பகத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட ஐம்பது மாவீரர்களின் பெற்றோர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு – வண்ணாங்குளம் பகுதியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில், மக்கள் நலன் காப்பகத்தின் முல்லை மாவட்டத் தலைவர் பாலு மத்தியூஸ் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பங்குத் தந்தை அன்ரன் ஜோர்ஜ், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், ம.தொம்மைப்பிள்ளை, தி.இரவீந்திரன் மற்றும் மக்கள் நலன் காப்பக நிர்வாகிகள், வண்ணாங்குளம் கிராம உத்தியோகத்தர் வே.அருணோதயம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மா.ஜெயசுதர்சன் ஆகியோரோடு மாவீரர்களின் பெற்றோர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஏ)

## இல்ல மெய்த்திறன் தகைமை விழா

*தாவடி,ஜன.31*

*யா.தாவடி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் இல்ல மெய்த்திறன் தகைமை விழா நாளை வெள்ளிக் கிழமை பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*பாடசாலை முதல்வர் ப.சுதானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் கல்விவலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன் முதன்மை விருந்தினராகவும், தென்மராட்சி வலய ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.லோகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.*

*(எ)*

## யாழில் மகாத்மா காந்தியின் 71 ஆவது சிரார்த்த தினம்

**(நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம்,ஜன.31

மகாத்மா காந்தியின் 71 ஆவது சிராத்த தினம் நேற்றுக் காலை யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.



காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் போதான வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள காந்தியின் நினைவுத் தூபியில் இந் நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது மகாத்மாகாந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன், வடமாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம், யாழ் மாநகர முதல்வர் இமானு வேல் ஆனல்ட், யாழ் அரச அதிபர் வேதநாயகம் உள்பட பல தரப்பினரகளும் கலந்து கொண்டிருந்தனர்.

(ஏ)





*காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தையிட்டி உப அஞ்சல் அலுவலகம் (கேசரி வீதி , தையிட்டி) 30 வருடங்களின் பின்னர் வட மாகாணப் பிரதி மா அஞ்சல் அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது.*

## தென்மராட்சியில் மின் மோட்டர் திருட்டு; புத்தளம் வாசி பொலிஸில் சிக்கினார்

கொடிகாமம்,ஜன. 31

தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலமாக நீரிறைக்கும் மின் மோட்டர்களைக் கொள்ளையிட்டு வந்த கொள்ளையர் ஒருவரைக் கையும் மெய்யுமாகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (29) காலை கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மின்மோட்டரை ஒருவர் களவாட முற்படுவதாக மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு வீட்டு உரிமையாளர் தகவல் கொடுத்துள்ளார்.

இதையடுத்து மாவட்ட குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ஜெயறோசன் தலைமையிலான புலனாய்வு அணியினர் குறித்த கொள்ளையரை கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்.

கைதானவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குள் இந்த மாதம் மட்டும் ஆறு மின்மோட்டர்களைக் திருடி யாழ்ப்பாணத்தில் உள்ள மின் மோட்டார் திருத்தும் நிலையத்தில் விற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து துரிதமாக செயற்பட்ட குற்றப்புலனாய்வுப் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் உள்ள மோட்டர் திருத்தும் கடை உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோதுதான் அவ்வாறு களவாடப்பட்ட மோட்டர் எதனையும் வாங்குவதில்லை என பொலிஸாரோடு முரண்பட்டுள்ளார்.



இதையடுத்து அங்கிருந்த கண்காணிப்பு கமராக்களைக் பொலிஸார் ஆராய்ந்தபோது அந்தக் கடை உரிமையாளர் தனது கடைக்கு வெளியே சற்றுத் தூரத்தில் வைத்து மின் மோட்டர்களைக் கொள்வனவு செய்வது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து கொள்ளையிட்டு விற்கப்பட்ட ஆறு மின் மோட்டர்களையும் மீட்டதுடன் கடை உரிமையாளரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம் பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் அவர் கொள்ளையிட்ட மோட்டர்களை மூவாயிரம் ரூபாவுக்கே விற்பனை செய்து வந்துள்ளதாகவும் மாவட்டக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட மின் மோட்டர்களையும் கைதானவரையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் மோட்டர் திருத்தும் கடை உரிமையாளரையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து ஒப்படைத்துள்ளனர்.

# அன்னா ஹசாரே மீளவும் உண்ணாவிரதம்

ராலேகான் சித்தி,ன.31

லோக்பால் சட்டத்தை கொண்டுவர வலியுறுத்தி சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே நேற்று தனது சொந்த ஊரான ராலேகான் சித்தியில் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார்.

காந்தியவாதியும், சமூக ஆர்வலரு மான அன்னா ஹசாரே லோக்பால் சட்டத்தை கொண்டுவரவும், லோக் ஆயுக் தாவை நியமிக்க வலியுறுத்தியும் தொடர்ந்து போராடி வருகிறார். லோக் ஆயுக்தாவை நியமிக்காவிட்டால் காந்தி பிறந்த தினமான கடந்த ஒக்டோபர் 2 ஆம் திகதி முதல் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் நடத்துவேன் என அறிவித்தார்.




மத்திய மற்றும் மாநில அரசுகளின் பிரதிநிதியாக மகாராஷ்டிர அமைச்சர் கிரிஷ் மகாஜன், அன்னா ஹசாரேவை சந்தித்து அரசு எடுத்து வரும் நடவடிக்கை குறித்து விளக்கினார். இதைத் தொடர்ந்து, தனது காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை ஒத்திவைத்தார்.

அப்போது பேசிய அவர், இனியும் மத்திய அரசு தாமதம் செய்தால் காந்தி நினைவு நாளான ஜனவரி 30ம் திகதி போராட்டம் நடத்த உள்ளதாக தெரிவித்தி ருந்தார்.

அதன்படி, அன்னா ஹசாரே தனது சொந்த ஊரான ராலேகான் சித்தியில் நேற்று காலை உண்ணாவிரத போராட் டத்தை தொடங்கினார்.

## பத்து நிமிட தாமதத்தால் வந்த வினை மனைவிக்கு தலாக் சொன்ன கணவன்

லக்னோ,ஜன.31

உத்தரபிரதேசத்தில் மனைவி தாய்வீட்டுக்குசென்று10நிமிடங்கள் தாமதமாக வந்ததால் கணவன், மனைவிக்குதலாக்கூறிவிவாகரத்து செய்தது அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

உத்திரபிரதேசத்தை சேர்ந்த பெண்ஒருவர்கணவர்வீட்டிலிருந்து தனது தாயை பார்க்க அவர் வீட் டுக்கு சென்றுள்ளார். வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பிய கண வன், வீட்டில் மனைவி இல்லாத தைக் கண்டார்.

இதனால் கோபமடைந்த கணவன் அரைமணிநேரத்துக்குள் வீட்டுக்குதிரும்பவில்லைஎன்றால் என்ன நடக்கும் என்றே எனக்கு தெரியாது என தொலைபேசியில் கூறியுள்ளார். பின்னர் மனைவி



கணவன் வீட்டுக்கு வந்துள்ளார். ஆனாலும் 10 நிமிடம் தாமதம். உச்சகட்ட கோபத்தில் இருந்த அந்தபெண்ணின்கணவர்அவருக்கு தலாக் கூறிவிட்டார்.

இதுகுறித்து பொலிஸில் புகார் அளிக்கப்பட்டதன்பேரில் பொலி ஸார் விசாரணை நடத்தி வருகின் றனர்.

(எ)

## கறுப்புச்சட்டை அணிந்த குழந்தைக்கு முதல்வரின் நிகழ்வில் அனுமதி மறுப்பு

திஸ்பூர்,ஜன.31

அஸாமில் முதல்வர் கலந்து கொண்ட விழா ஒன்றில் குழந்தை ஒன்றுக்கு அனு மதி மறுக்கப்பட்ட விவகாரம் சர்ச்சை களைக் கிளப்பியுள்ளது.

அஸாம் மாநிலத்தை தற்போது பா.ஜ.க. ஆண்டு வருகிறது. அங்கு அரசு கொண்டு வந்த குடிமக்கள் சீர்திருத்த சட்டத்துக்குப் பொதுமக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு உருவாகியுள்ளது.

அதனால் பா.ஜ.கவை சேர்ந்தவர்கள் எந்த நிகழ்வில் கலந்து கொண்டாலும் மக்கள் கறுப்புக் கொடி காட்டி தங் கள் எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்ற னர்.

இந்நிலையில் அடிக்கல்நாட்டு விழா ஒன்றில் அஸாம் முதல்வர் சர்பானந்தா சோனோவால் கலந்து கொண்டார்.

இதில் பாதுகாப்பு அதிகாரிகள் கறுப்




புச்சட்டை அணிந்து வந்த 3 வயது குழந் தையை உள்ளேவர அனுமதி மறுத்தமை சர்ச்சையானது.

இந்த விடயம் முதல்வர் காதுக்கு செல்லவே அவர், அசாம் டிஜிபி குலதர் சிகியாவை இதுசம்பந்தமாக அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## தீர்ப்பு வரும் முன் ராமர் கோவில்; சுப்பிரமணியம்சுவாமி சர்ச்சை கருத்து


சென்னை,ஜன.31

ராமர் கோவில் குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருக்கும் நிலை யில் தீர்ப்பு வருவதற்குள் ராமர் கோவி லின்கருவறைதவிர ஏனைய அனைத்து பகுதிகளையும் கட்டி முடிக்க திட்டமிட் டிருப்பதாகவும், தீர்ப்பு வந்த பின், கோவி லின் கருவறையை கட்ட உள்ளதாகவும் சுப்பிரமணியம்சுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்துள்ளார்.

அயோத்தி விவகாரத்தில், சர்ச்சைக்கு உட்படாத 42 ஏக்கர் நிலத்தை விடு விக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மத் திய அரசு, மனு தாக்கல் செய்துள் ளது.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. இந்த வழக்கில் சர்ச்சைக்கு உட்படாத 42 ஏக்கர் நிலத்தை ஒரு வேளை நீதிமன்றம் விடுவித்தால் என்ன நடக்கும் என்பது குறித்து சுப்பிரமணி யம் சுவாமி தனது டுவிட்டரில் குறிப்பிட் டுள்ளார்.

உள்துறை அமைச்சகத்துடன்



கோவில் கட்டுவது தொடர்பாக விவாதம் செய்ததாகவும், ஆனால் முறையாக அனுமதி பெற்ற பிறகே கோவில் கட்ட மத்திய அரசு விரும்புவதாகவும் தெரி வித்த சுவாமி, தீர்ப்பு வருவதற்குள் கருவறை தவிர மற்றய பகுதிகளை கட்டிவிட்டு, தீர்ப்புக்கு பிறகு, கோவிலின் கருவறையை கட்ட உள்ளதாகவும் பதி விட்டுள்ளார்.

**நாடாளுமன்ற தேர்தலுக்காக**

## நாடு முழுவதும் பிரியங்கா பிரசாரம்

புதுடில்லி,ஜன.31

நாடாளுமன்ற தேர்தலுக் காக நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் பிரியங்கா பிரசாரம் செய்வார் என்று காங் கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் –

அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர்களாக இருப்பவர்கள் தேசிய பிரசார குழுவில் உறுப்பினராகத்தானா கவே தேர்வாகி விடுவார்கள். அவர்கள் தேவைக்கு ஏற்ப நாடு முழு வதும் சென்று காங்கிரஸ் வேட்பாளர்க ளுக்குப் பிரசாரம் செய்வார்கள்.

பொதுவாக ஒவ்வொரு மாநிலமும் மூத்த தலைவர்களை அழைத்து பிரசாரம் செய்ய வைப்பது உண்டு. அந்த வகை யில் பிரியங்காவை எந்தெந்த தொகுதி களில் அழைக்கிறார்களோ அங்கெல் லாம் அவர் சென்று காங்கிரஸ் வேட்பாளர் களுக்காகப் பிரசாரம் செய்வார்.



நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் பிரியங்கா பிரசாரம் செய் வார்.

அதோடு அவர் உத்தரபிரதேசத்தில் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள 40 தொகுதி களையும் சேர்த்து கவனித்துக் கொள் வார். பிரியங்காவின் பிரசாரத்தால் மற்ற மாநிலங்களில் ராகுல் திறம்பட பிரசா ரத்தை மேற்கொள்ள வாய்ப்பு உருவாகி உள்ளது என்றார்.

(எ)

## சிறுபான்மை பள்ளிகளுக்கு எதிரான அரசாணையை இரத்து செய்தது நீதிமன்றம்

சென்னை,ஜன.31

சிறுபான்மை பள்ளிகள் தொடர்பாக கடந்த ஆண்டு தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை உயர்நீதி மன்றம் நேற்று ரத்து செய்துள்ளது.

சிறுபான்மை பள்ளிகள் தொடர்பாக, தமிழக பள்ளிக்கல் வித்துறை கடந்த ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி ஒரு அரசாணை வெளியிட்டது. அதில், 50 சதவீத சிறுபான்மை மாணவர்களை சேர்க்கும் பள்ளிக்கே சிறுபான்மை அந்தஸ்து வழங்கப்படும் என அந்த அரசாணையில் கூறப்பட்டிருந்தது.

இந்த அரசாணையை எதிர்த்து 140 கல்வி நிறுவனங் கள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. சிறுபான்மை பள்ளிகள் நடத்துவதற்காக வழங்கப்பட்ட உரிமையை பறிக்கும் வகையில் இந்த அரசாணை உள்ளது என்றும், இதனை இரத்து செய்ய வேண்டும் என்றும் மனுவில் கூறியிருந்தனர்.

இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம், சிறுபான்மை பள்ளிகள் தொடர்பாக அரசு பிறப்பித்த அரசாணையை இரத்து செய்து உத்தரவிட்டது.

பள்ளிகளுக்கு சிறுபான்மை அந்தஸ்து வழங்கும் அதி காரம் மாநில அரசுக்கு இல்லை என்றும் அது தெரிவித்தது.

(எ)



### ஆஸியை வாட்டி வதைக்கிறது இயற்கை

# வறட்சி, வெள்ளப்பெருக்கால் மக்கள் அவதி கோடிக்கணக்கில் மீன்கள் இறந்து மிதப்பு

சிட்னி,ஜன.31

ஆஸ்திரேலியாவில் உள்ள டார்லிங் நதியில் கோடிக்கணக்கில் மீன்கள் இறந்து மிதப்பதால், அந்த நதி வெள்ளை நிறத்தில் காட்சியளிக்கிறது.



ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தில் புகழ் மிக்க டார்லிங் நதி உள்ளது. இது முர்ரே டார்லிங் நதியின் ஒரு பகுதியாகும். பல ஆயிரம் கிலோமீட்டர் நீளம் கொண்டது. இந்நதியில் மீன்கள் உள்ளிட்ட பல நீர்வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

தற்போது கடுமையான வறட்சி காரணமாக ஆற்றில் உள்ள மீன்கள் செத்து மிதக்கத் தொடங்கி உள்ளன. நேற்று நதிக்கு அருகே உள்ள மெனிண்டீ பகுதி மக்கள், நதியின் மேற்பகுதியில் மீன்கள் இறந்து மிதந்து கொண்டிருப்பதைக் கண்டனர்.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், 'வெப்பநிலை மாற்றம் மற்றும் ஒக்ஸிசன் அளவு குறைந்து அல்கா நச்சாக மாறியதால், மீன்கள் சுவாசிக்க இயலாமல் இறந்துள்ளன' என கூறினர்.

ஆனால், சுற்றி இருக்கும் தொழிற்சாலைகளில் இருந்து ஆற்றில் கலக்கும் மாசுதான் மீன்கள் சாவதற்கு உண்மையான காரணம் என்று உள்ளூர் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கடுமையான வெப்பநிலை ஆஸ்திரேலியாவை தாக்கி 40 இற்கும் மேற்பட்ட குதிரைகள் இறந்தன. இந்நிலையில், திடீரென வெப்பநிலை குறைந்ததாலும், பருவகால மழை கால தாமதமாக பெய்ததாலும் ஆஸ்திரேலிய மக்கள் பல சுற்றுச்சூழல் பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். இதேபோல், நதியில் ஒக்ஸிசன் தட்டுப்பாட்டின் காரணமாக மீன்கள் இறந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், ஆஸ்திரேலியா வரலாறு காணாத வெள்ளப் பெருக்கையும் சந்தித்தது. இதன் விளைவாக குயின்ஸ்லேண்டின் பிரதான டின்டிரி ஆற்றின் நீர் மட்டம் 12.06 மீட்டர் உயர்ந்தது. இது கடந்த நூற்றாண்டில் இதுவரை எட்டாத நீர்மட்டம் ஆகும். இதனால் விவசாயிகளும் பொதுமக்களும் கடும் பாதிப்புக்கு ஆளாகினர்.

இதே நிலை நீடித்தால், டார்லிங் ஆற்றில் எஞ்சியிருக்கும் மீன்கள் இறப்பதற்கும் வாய்ப்பு உள்ளதாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரொட்டி விலை உயர்வுக்கு எதிராக போராட்டம் சூடானில் பலி எண்ணிக்கையும் அதிகரித்தது



கார்டூம்,ஜன.31

சூடானில் ரொட்டி விலை உயர்வுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு பலியானவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்து உள்ளது.

சூடான் நாட்டில் கடந்த டிசம்பர் மாதம் மக்கள் சாப்பிடக்கூடிய ரொட்டியின் விலை உயர்வு மற்றும் பொது பொருளாதார நெருக்கடி ஆகியவற்றை தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த போராட்டங்களில் கடந்த 21ஆம் திகதி வரை 24 பேர் பலியாகினர். 200 பேர் காயமுற்றனர் என தகவல் துறை அமைச்சர் ஹசன் இப்ராகிம் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்த நிலையில், இந்த பலி எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்து உள்ளது என நாட்டின் போராட்ட நிலையை விசாரணை மேற்கொள்ளும் கண்காணிப்பு குழுவின் தலைவர் அகமது இப்ராகிம் கூறியுள்ளார்.

சூடானின் கத்தரீப் மற்றும் அத்பரா ஆகிய நகரங்களை சேர்ந்த பொதுமக்கள் முதலில் வீதிகளில் போராட்டங்களில் ஈடுபட தொடங்கினர். இந்த போராட்ட சம்பவங்களை தொடர்ந்து சூடான் நாட்டு அதிகாரிகள் எண்ணற்ற நகரங்களில் நெருக்கடி நிலையை அறிவித்தனர்.

## மல்லார்ட் இனத்தின் கடைசி வாத்தும் சாவு

சிட்னி,ஜன.31

மல்லார்ட் இனத்தின் கடைசி வாத்தும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் பசுபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள மிகச்சிறிய தீவு, நியுவே . இந்தத் தீவில் உலகில் எங்கும் காணப்படாத 'மல்லார்ட்' இன வாத்துக்கள் வாழ்ந்து வந்தன. வேட்டையாடுதல் காரணமாக அழிந்துவந்த இந்த வகை வாத்துக்கள் கடந்த ஆண்டு 2 ஆயிரம்மட்டுமேஇருந்தன.



சிலமாதங்களுக்கு முன்புமல்லார்ட் இனத்தின் அனைத்து வாத்துக்களும் இறந்து விட, ஒரே ஒரு ஆண் வாத்து மட்டும் இருப்பதாக தெரியவந்தது. கடந்த ஆண்டு பத்திரிகையாளர் ஒருவர் அந்த ஆண் வாத்தை புகைப்படம் எடுத்து வெளியிட்ட பிறகு, உலகின் தனிமையான வாத்து என பிரபலமானது.

இந்நிலையில் மல்லார்ட் இனத்தின் கடைசி வாத்தும் செத்துவிட்டது. கடந்த சில தினங்களுக்கு முன் புதர் ஒன்றில் நாய்களால் கடிக்கப்பட்டு வாத்து செத்து கிடந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். இதன் மூலம் மல்லார்ட் இன வாத்து முற்றிலும் அழிந்து போனது.

## பலரையும் வியப்பில் ஆழ்த்திய வங்கி அதிகாரியின் ஓய்வு நாள் வேடம்

பிரேசிலியா,ஜன.31

பிரேசிலில் வங்கி அதிகாரி தனது பணியின் ஓய்வு நாளன்று ஸ்பைடர் மான் போல் வேடமிட்டு வந்து பலரை ஆச்சரியத்துக்கு ஆளாக்கியது.

பிரேசிலில் நபர் ஒருவர் வங்கியில் வேலைபுரிந்து வந்தார். அந்த நபர் தனது ஓய்வு நாளில் தனது சக ஊழியர்களையும், வாடிக்கையாளர்களையும் வியக்க வைக்கவும், தனது அலுவலகத்தின் கடைசிநாளில் ஏதாவது புதுமையாக செய்யவேண்டுமென ஐடியா செய்து, அலுவலகத்துக்கு ஸ்பைடர்மான் உடையில் வந்தார்.

அவரைப்பார்த்த ஊழியர்கள் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தனர்.

வாடிக்கையாளர்களும் அவரைப் பார்த்து வியந்தனர். இந்த நாளை மறக்கமுடியாத நாள் ஆக்கவேண்டும் என்பதற்காக தான் இப்படி செய்தேன் என அந்த நபர் கூறினார்.



(எ)

## செவ்வாயிலும் செல்பி அசத்தும் கியூரியாசிட்டி


செவ்வாயின் மலை முகட்டில் இருந்து செல்பிஎடுத்து கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் பல புகைப்படங்களை அனுப்பியுள்ளது.

கியூரியாசிட்டி ரோவர், தான் எடுத்த பல செல்பி புகைப்படங்களால் தனது இன்ஸ்டாகிராம் பகுதியில் பெயர் வாங்கியது. இவை, அந்த ரோவரின் பெருமையைக் காட்டிக்கொள்ளும் விடயமாக மட்டும் இல்லாமல், ரோவரின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை நாசா குழுவினர் அறிந்துகொள்ளவும் உதவியது.

கியூரியாசிட்டியின் சுய புகைப்படங்கள் அனைத்தும், அதன் 'கைமுனையில்' இருந்த கருவியான எம்.ஏ.எச்.எல்.ஐ. மூலமாக எடுக்கப்பட்டவை.

கார் அளவிலான ரோவர் இப்போது மவுண்ட் ஷார்ப் ஒரு களிமண் பகுதியை நோக்கி இறங்கி வருகிறது. அதற்கு முன் கடந்த ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி ராக் ஹால் என்று அழைக்கப்படும் ரிட்ஜ் என்ற இடத்தில் தனது 19 ஆவது மண் மாதிரிகளை எடுத்து அனுப்பி இருந்தது.

இங்குள்ள களிமண் தாதுக்கள் மவுண்ட் ஷார்ப் மீது பண்டைய ஏரிகள் இருந்ததமைக்கான தடயங்கள் இருக்கலாம் என நாசா கூறி உள்ளது.



## சீன மொழியில் பேச தடைவிதித்த உதவி பேராசிரியையின் பதவி பறிப்பு

வொஷிங்டன்,ஜன.31

அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் சீன மொழியில் பேச எதிர்ப்பு தெரிவித்த உதவி பேராசிரியை மெகன் நீலி ஆய்வு பட்டப்படிப்புகளுக்கான இயக்குனர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.




அமெரிக்காவின் வடகரோலினா மாகாணத்தில் உள்ள டியூக் பல்கலைக்கழகத்தில் உதவி பேராசிரியையாக பணியாற்றி வருகிறார் மெகன் நீலி. மேலும் இவர் உயிரி புள்ளியியல் துறையின் ஆய்வு பட்டப்படிப்புகளுக்கான இயக்குநராகவும் இருந்தார்.

இந்த நிலையில் இந்த பல்கலைக்கழகத்தில் படிக்கும் சீனாவை சேர்ந்த மாணவர்கள் சிலருக்கு மெகன் நீலி சமீபத்தில் மின்னஞ்சல் ஒன்றை அனுப்பினார். அதில் மாணவர்கள் யாரும் சீன மொழியில் பேச வேண்டாம். ஆங்கிலம் உங்களுக்கு அந்நிய மொழி என்பது எனக்கு புரிகிறது. ஆனால், அதனை மேம்படுத்திக் கொள்ள முயலுங்கள். தேவையற்ற விளைவுகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள் என்று குறிப்பிட்டார்.

இது அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மெகன் நீலியின் மின்னஞ்சல் சமூக வலைத்தளங்களில் தீவிரமாக பரவியது. மெகன் நீலியை இன வெறியர் எனப் பலர் குற்றம் சாட்டினர். மேலும் இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் புகார் அளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, ஆய்வு பட்டப்படிப் புகளுக்கான இயக்குநர் பதவியில் இருந்து மெகன் நீலி நீக்கப்பட்டார்.

# வவுனியா வடக்கில் உருவாகும் மற்றொரு சிங்களக் குடியேற்றம்



வவுனியா வடக்கில், கச்சல் சமனங்குளத்தையும் அதனை அண்டிய பகுதியையும், சப்புமல்கஸ்கட எனப் பெயர் சூட்டி, சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்த முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கச்சல் சமனங்குளம் தமிழர்களின் பூர்வீக கிராமமாக காணப்பட்டதுடன் அங்குள்ள கச்சல் சமனங்குளத்தில் அந்தக் கிராமத்திலும் அதனை அண்டி வாழ்ந்த வெடிவைத்தகுளம் பிரதேச மக்களும் இணைந்து விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

எனினும் யுத்தம் காரணமாக வெடிவைத்தகுளம் மற்றும் கச்சல் சமனங்குளம் பிரதேசத்தில் இருந்து தமிழ் மக்கள் வெளியேறிய நிலையில் தற்போதும் அப்பகுதியில் மக்கள் குடியேறாமல் தமது வயல் நிலங்களில் விவசாயம் செய்து வருகின்றனர். இவ்வாறான ஒரு சூழலிலேயே கொக்கச்சான்குளம் என்ற தமிழ் மக்கள் வாழ்ந்த கிராமத்தையும் அந்தக் குளத்தையும் ஆக்கிரமித்து கலாபோகஸ்வெவ என்ற பெயரில் சிங்கள குடியேற்றம் செய்யப்பட்டு அங்கு பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுத் தற்போது அந்தப் பிரதேசம் சிங்கள மக்களின் கிராமமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொக்கச்சான் குளம் என்ற கலாபோகஸ் வெவ கிராமத்தின் பின்புறமாக அதனை அண்டிய கச்சல் சமனங்குளத்தையும் ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும், அதற்குச் சப்புமல்கஸ்கட என சிங்களப் பெயரைச் சூட்டவுள்ளதாகவும் அந்தப் பிரதேசத்து மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை,கச்சல்சமனங்குளத்தில் பௌத்த பிக்கு ஒருவர் விகாரை அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறார் என்றும் தெரிவிக்கும் அப்பிரதேசத்து மக்கள், இவ்விடயம் தொடர்பாகநாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து செயற்பட்டுத் தமிழர்களின் பிரதேசத்தைக் காக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## இணைப்பாடவிதான செயற்பாட்டின்மூலம் ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும்

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



இணைப்பாட விதான செயற்பாடுகளினூடாக ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வுப்போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

எமது மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் தலைசிறந்து விளங்கியவர்கள். தற்போதும் தலைசிறந்து விளங்கக் கூடிய வகையில் அவர்களிடம் திறன்கள் இருக்கின்றன. அவர்களின் திறனை மழுங்கடித்து எமது மாணவர்களையும் இளைஞர்களையும் திசை திருப்பும் முயற்சிகள் இந்த மண்ணிலே கச்சிதமாக அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன .இவற்றை எல்லாம் முறியடித்து நாம் கல்வியிலும் விளையாட்டிலும் சாதனை படைக்க வேண்டும். – என்றார்.

இந்த நிகழ்வு பாடசாலை முதல்வர் த.தமிழ்ச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

தென்மராட்சி வலயக்கல்வி பணிமனையின் கணிதப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மதிதரன், ஓய்வு நிலை அதிபர்களான இராஜேந்திரம், சி.பவளேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

## 20 நாய்கள் வாங்குவதற்கு ரூபா 4 கோடி 68 இலட்சம்

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன. 31

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருள் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்த 20 மோப்ப நாய்களை வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சிவில் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு எடுத்துவரவுள்ள ஒரு நாய்க்கு 20 லட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளதாகவும், மொத்தம் 4 கோடி 68 லட்சம் ரூபா நிதியை செலவு செய்யவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## வாகரை பால்சேனையில் கூட்டமைப்பின் பொங்கல்

மட்டக்களப்பு,ஜன.31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொங்கல் விழா எதிர்வரும் 02ஆம் திகதி மட்டக்களப்பு வாகரை பால்சேனையில் கோறளைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் சி.கோணலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான ம.அ.சுமந்திரன் கலந்து கொண்டு பொங்கல் பேருரை ஆற்றவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## டி.ஐ.ஜி. நாலக டி சில்வாவின் மறியல் தொடர்ந்தும் நீடிப்பு

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக்க மறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அவர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் அவர் நேற்று மீண்டும் கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர்வரும் பெப்ரவரி 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

# தென்னாபிரிக்காவின் சுதந்திர தின நிகழ்வை யாழ்.மாநகரத்தில் விழாவாக எடுக்க திட்டம்

## தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர் - யாழ் முதல்வர் சந்திப்பில் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் – இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் றொபினா பி மார்க்ஸ் இடையே விசேட சந்திப்பொன்று கடந்த சனியன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில்முக்கியமூன்றுவிடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. முதலாவதாக தென்னாபிரிக்காவின் சுதந்திர தின விழாவை இம்முறை யாழ் மாநகரத்தில் விழாவாக முன்னெடுப்பது தொடர்பாகவும், சுதந்திர தின விழாவில் தெரிவு செய்யப்படும் 200 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்களை வழங்குவதற்கு எண்ணியிருப்பதாகவும் முதல்வர் குறிப்பிட்டிருந்தார். அதனை முன்னெடுப்பதற்கான திட்டமிடல்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

அடுத்து தற்போதைய சூழ் நிலையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் குறித்தும், அதன் நெருக்கடி நிலை மற்றும் சாதக பாதகங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் உயர்ஸ்தானிகர் வினவியமைக்குப் பதிலளித்தார் முதல்வர்.

'இம்முறை கொண்டுவரப்படுகின்ற பிரேரணையில்தான் இலங்கை தொடர்பானநிகழ்ச்சிநிரல் மார்ச் ஜெனிவா மாநாட்டில் தொடர்ந்தும் இருக்கப் போகின்றதா, இல்லையா என்று தெரியவரும்.

30.1தீர்மானத்தின் மீதான நம்பிக்கை குறைவாக இருந்ததனாலேயே சர்வதேசத்தின் அனுசரணையோடு 34.1தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் சர்வதேசத்தின் அனுசரணையைப் பெற்றுக் கொள்வதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை தாங்கள் அறிந்ததே.

பல தசாப்தங்களாக இவ் அரசாங்கத்தை நம்பி மக்கள் தற்பொழுது மிகக் கடுமையான அதிருப்தியில் இருக்கின்றார்கள். எனவே மார்ச் மாதமளவில் இலங்கை மீது கொண்டுவரப்பட வேண்டிய தீர்மானம் தொர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முன்னெடுத்து வருகின்றது. இருப்பினும் அரசின் மீது கடுமையான அதிருப்தியில் இருக்கின்ற மக்களைச் சந்தித்து கூட்டமைப்புதலைமை பொறிமுறை



தொடர்பில் உரிய தெளிவுகளை கொடுப்பதுடன் மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுத்தான் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நான் எண்ணுகின்றேன். இது தொடர்பில் கட்சித் தலைமைக்கும் விளக்கியிருக்கின்றேன் என்று முதல்வர் கூறியிருந்தமையுடன், கட்சிதான் இறுதித்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இறுதியாக தென்னாபிரிக்காவினால் யாழ் மாநகரத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் முன்மொழிவுகளை உயர்ஸ்தானிகர் முதல்வரிடம் கேட்டிருந்தார். உரிய முறையில் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதாக முதல்வர் குறிப்பிட்டார்.

இரண்டு மணி நேரம் இக் கலந்துரையாடல் மிகவும் ஆரோக்கியமான முறையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாயை ஏற்றிவர சூரிச்சுக்கு விமானம் அனுப்பியவர் ஜனாதிபதியாகலாமா?



## அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆவேசம்

கொழும்பு, ஜன. 31
வீட்டில் வளர்ப்பதற்காக, சூரிச் நகருக்கு விமானம் அனுப்பி நாயொன்றைக் கொண்டு வந்தவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த எதிரணி தயாராவதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–
நாட்டைக் கட்டியெழுப்ப நிர்வாகத்தைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு சிலர் கூறுகின்றனர். 1998 முதல் 10 வருடங்களில் ஈட்டப்பட்ட 14,00 கோடி ரூபா இலாபத்துடனே ஸ்ரீலங்கன் விமான நிலையம் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.
நாட்டைக் கட்டியெழுப்புவதாகற்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகும் நபர்களின் நிர்வாகத்தின் கீழே விமான சேவைக்கு 25 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது. மக்கள் வராத மாநாட்டு மண்டபங்கள், விமானம் வராத விமான நிலையங்கள், கிரிக்கெட் விளையாடாத கிரிக்கெட் மைதானங்கள், பெருமைக்காகக் கட்டிய துறைமுகங்கள் அமைத்தவர்கள் போன்று நாம் நாட்டை நாசம் செய்ய வில்லை.
ஜனாதிபதி வேட்பாளர் என்று கூறிக் கொள்ளும் நபரின் வீட்டுக்கு நாய் ஒன்றை எடுத்த வர சூரிச் நகருக்கு விமானம் அனுப்பப்பட்டது.
இவர்கள் தான் இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடச் சிறந்த முகாமைத்துவ நிபுணர்கள் போன்று தம்மைக் கூறிக் கொள்கிறார்கள். இவர்கள் தான் விமான சேவையை நாசமாக்கினார்கள். இதன் பலனை இன்று அனுபவிக்க நேரிட்டுள்ளது– என்றார்.
(ஐ)

# தேர்தல் ஆணையாளருக்கு மஹிந்த தரப்பு பாராட்டு



கொழும்பு, ஜன. 31
மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர், நீதிமன்றின் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.
இதன்போது மேலும் தெரிவித்த அவர், தேர்தல்கள் ஆணையாளர் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்தாவிடின் தான் பதவி விலகுவதாக அறிவித்திருந்தார்.
இதற்காக நாம் அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்படுகின்றமைக்கு எதிரான ஒரு பெரும் கருத்தாகவே நாம் இதனை எண்ணுகிறோம்.
ஆனால், அவர் பதவி விலகுவது இந்த விடயத்தில் தீர்வாக அமையாது. மாறாக, இந்த விடயத்தை நீதிமன்றின் ஊடாகத் தீர்க்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.
ஐக்கிய தேசியக் கட்சி தவிர, ஏனைய அனைத்துக் கட்சிகளும் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதில் உறுதியாகவே இருக்கின்றன.
தேர்தலுக்கு முகம் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி அஞ்சுவதாலேயே தேர்தல் பிற்போடப்பட்டு வருகின்றது.
எவ்வாறாயினும், மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். இது மக்களுக்கான உரிமையாகும். இந்த உரிமையை மக்களுக்கு அரசு நிச்சயமாக பெற்றுக்கொடுக்க வேண்டும்–என்றார்.
(ஐ)

# தேர்தல் ஆணையாளர் பதவி விலகினாலும் குழப்பம் தீராது

## கூறுகின்றார் மஹிந்த



கொழும்பு, ஜன. 31
தேர்தல் ஆணையாளர் பதவி விலகுவதால் மட்டும் நாட்டின் குழப்பத்துக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்–
நாட்டில் காணப்படுகின்ற குழப்ப நிலைகளுக்குத் தற்போதைய அரசின் செயற்பாடுகளே காரணம். முதலில் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு முன்னெடுக்க வேண்டும்.
தேர்தலை அரசு விரைந்து நடத்தாவிட்டால் தான் பதவி விலகுவார் எனத் தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.
ஆனால் இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையாளர் பதவி விலகுவதால் மட்டும் இந்தப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.
எனவே அரசு அனைத்துத் தரப்பினரதும் வலியுறுத்தலுக்கு அமைவாகவும் நாட்டின் தேசிய நலனைக் கருத்திற் கொண்டும் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்– என்றார்.
(ஐ)

# இலங்கைக்கு புதிய ஆஸி. தூதர்

கொழும்பு, ஜன. 31
இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் புதிய தூதுவராக டேவிட் ஹொலி நியமிக்கப்பட்டுள்ளார் என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மாரிஸ் பைன் அறிவித்துள்ளார்.
இலங்கைக்கான அடுத்த தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள டேவிட் ஹொலி, ஆஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வணிகதிணைக்களத்தின் மூத்த அதிகாரியாவார்.




இதற்கு முன்னர் இவர் சென்னை, புதுடில்லி, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் ஆஸ்ரேலியத் தூதரக அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.
கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஆஸ்திரேலிய தூதுவராகப் பணியாற்றிய பிரைஸ் ஹட்சிசன் தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையிலேயே புதிய தூதுவராக டேவிட் ஹொலி அறிவிக்கப்பட்டுள்ளார்.
(ஐ)

# அமெரிக்க முகாம் அமைக்கும் உடன்பாடு எதுவுமே இல்லை

## மறுக்கிறார் ருவான் விஜேவர்தன

கொழும்பு, ஜன. 31
இலங்கையில் அமெரிக்கப் படைத்தளம் அமைப்பது பற்றி எந்தவொரு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.
அநுராதபுரத்தில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். பல நாடுகளுடன் பாதுகாப்பு அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருப்பினும் அமெரிக்காவுடன் இதுவரை எவ்வித ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை என மேலும் தெரிவித்தார்.
(ஐ)

# கனடாவில் இரு இலங்கைத் தமிழர்களை கொன்றதை ஒப்புக்கொண்டார் மக் ஆதர்!



மொன்றியல், ஜன. 31
இரண்டு இலங்கையர்கள் உள்ளிட்ட 8 பேரைக் கொலை செய்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள புரூஸ் மக் ஆதர் என்ற கனேடியர், தம் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டுள்ளார்.
இதனையடுத்து அவரே கனடாவில் அதிக கொலைகளைச் செய்தவராகக் கருதப்படுகிறார் என்று கனேடியச் செய்திகள் தெரிவிக்கின்றன.
2010–2017ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இரண்டு தமிழ் அகதிகள் உட்பட்ட 8 பேரைக்கொலைசெய்தார் என மக் ஆதர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இதற்கு ஆதாரமாக கொலை செய்யப்பட்டவர்களின் புதைக்கப்பட்ட சடலங்கள் அவரின் காணிகளில் இருந்து விசாரணையாளர்களால் மீட்கப்பட்டன. இந்த நிலையிலேயே அவர் நேற்று முன்தினம் கனேடிய நீதிமன்றத்தில் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.
இவரால் கொலை செய்யப்பட்டவர்களில் 40 வயதுடைய ஸ்கந்தராஜ்நவரட்ணம், கிருஷ்ண குமார் கனகரத்தினம் ஆகிய இலங்கைத் தமிழ் அகதிகளும் உள்ளடங்கியுள்ளனர்.
இவருக்கு எதிரான விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. இதன்போது அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
(ஐ)

# கட்டுநாயக்காவில் மர்ம விமானம்?

கொழும்பு, ஜன. 31
பல்வேறு பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரித்து நிற்பதாக எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன கூறியுள்ளார்.
விமான நிலையத்தில் உள்ள அந்த விமானத்தை இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினரோ, விமானப் படையினரோ பரிசோதனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
விமானத்தில் வந்தவை திருகோணமலையில் அமைக்கப்பட உள்ள அமெரிக்க இராணுவ முகாமுக்காகக் கொண்டு வரப்பட்ட உபகரணங்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறினார்.
(ஐ)



# விறுவிறுப்பான போட்டியில் வெற்றியை தவறவிட்ட சென்.ஜோன்ஸ்

காலி.ஜன.31

காலி - ரத்கம பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற யாழ். சென். ஜோன்ஸ் மற்றும் அம்பலாங் கொடை ஸ்ரீ தேவானந்த கல்லூரிகளுக்கு இடையி லான சிங்கர் 19 வயதுக்குட்பட்ட பிரிவு 2 (டிவிஷன் 2) இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவு பெற்ற போதும், முதல் இன்னிங்ஸ் வெற்றி ஸ்ரீ தேவானந்த கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (28) நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, தேவானந்த கல்லூரியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதன்படி களமிறங்கிய தேவானந்த கல்லூரி ஆரம்பத்தில் ஓட்டங்களை பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டது. அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் புத்தி டி சில்வா 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் மற்றுமொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பசிந்து தனன்ஜய வேகமாக 65 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து ஆட்டமிழக்க, மறுமுனையில் ஷெரோன் ஷெஹான் 47 ஓட்டங்களை விளாசி னார். இவர்களின் இருவரினதும் விக் கெட்டுகளை செல்வதாஸ் சராண் வீழ்த்த, அடுத்தடுத்த விக் கெட்டுகள் குறைந்த ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டன.

சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் செல்வதாஸ் சராண் அபா ரமாக பந்து வீசி 4 விக்கெட்டுகளை கைப்பற்ற, தேவானந்த கல்லூரி 58 ஓவர்கள் நிறைவில் 211 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்துவீச்சில் சராணை யடுத்து சிறப்பாக பந்து வீசிய தெய்வேந்திரம் டினோஷனும் 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் தங்களுடைய முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியின் துடுப்பாட்ட வீரர்கள் மிக வேகமாக ஓட்டங்களை குவிக் கத் தொடங்கினர். இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அந்தோனிபுள்ளை சுகிதன் 32 பந்துகளுக்கு 47 ஓட் டங்களை விளாசி விக்கெட்டினை பறிகொடுக்க, மார் பின் அபினாஷ் 32 பந்துகளுக்கு 35 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார். இவர்கள் இருவ ரைத் தவிர ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் வேகமாக ஓட்டங்களை குவிக்க முற்பட்டு விக்கெட்டுகளை பறி கொடுத்தனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி 33.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பந்து வீச்சில் சமிந்து அனுஷ்க மற்றும் சாமிக பெரேரா ஆகியோர் தலா 3 விக்கெட்டு களை வீழ்த்த, ஷெரோன் ஷெஹான் 2 விக்கெட்டு களை கைப்பற்றினார்.

இதனையடுத்து தங்களுடைய இரண்டாவது இன் னிங்ஸை ஆரம்பித்த ஸ்ரீ தேவானந்த கல்லூரி முதல் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இதன்படி, இரண்டாவது நாள் களமிறங்கி, 57 ஓட்டங்கள் என்ற முன்னிலையுடன் ஆட்டத்தை ஆரம்பித்த ஸ்ரீ தேவானந்த கல்லூரிக்கு, சென். ஜோன்ஸ் கல்லூரி தங்களுடைய பந்து வீச்சின் மூலம் நெருக்கடியை கொடுத்தது. எனினும், முதல் இன் னிங்ஸை விட சற்று வேகமாக துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ தேவானந்த கல்லூரி விக்கெட்டுகள் சரிக்கப்பட்ட போதும், ஓட்ட எண்ணிக்கையை நகர்த்தி வந்தது.

இதனடிப்படையில், ஸ்ரீ தேவானந்த கல்லூரியின் சார்பில் சொஹான் டி லிவெரா 33 பந்துகளுக்கு 53 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க அந்த அணி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது. எனினும் ஒரு கட்டத்தில் 156 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த தேவானந்த கல்லூரி கடைசி விக்கெட் டுக்காக பெறப்பட்ட 55 ஓட்ட இணைப்பாட்டத்தின் உதவியுடன் மீண்டும் 211 ஓட்டங்களை குவித்து, வெற்றி இலக்காக 263 ஓட்டங்களை நிர்ணயித்தது.

ஸ்ரீ தேவானந்த கல்லூரி கல்லூரி சார்பில் இறுதி விக்கெட்டுக்காக போராடி ஓட்டங்களை குவித்த சாமிக பெரேரா 47 ஓட்டங்களை பெற்றுக் கொண்டமையுடன், ஹேசான் மிலக்ஷ 33 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை வீழ்த் திய செல்வதாஸ் சராண் இம்முறை 3 விக்கெட்டுகளை வீழ்த்தியமையுடன், எண்டன் அபிஷேக் மற்றும் மார் பின் அபினாஷ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை பகிர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து போட்டி முடிவடைய பாதி நேரம் மாத்திரமே கைவசமிருந்த நிலையில், 263 என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி விரைவாக ஓட்டங் களை குவித்து வெற்றியிலக்கை நெருங்கிய போதும் துரதிஷ்டவசமாக கடைசி நிமிடங்களில் விக்கெட்டு களை பறிகொடுத்தது. எனினும், இறுதி விக்கெட்டை தற்காத்துக்கொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி போட் டியின் முழுமையான தோல்வியை தவிர்த்துக் கொண்டது.

சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய நாகேந்திரராஜன் சௌமியன் 44 ஓட்டங்களையும், அந்தோனிபுள்ளை சுகிதரன் 25 ஓட்டங்களையும் பெற்று சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்க, அடுத்து களமிறங்கிய தெய்வேந்திரம் டினோஷன் எதிரணி பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களை குவித்தார். இவருடன் நேர்த்தியான இணைப்பாட்டத்தை வழங்கிய மார்பின் அபினாஷ் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, டினோஷன் அரைச் சதம் கடந்து 94 பந்துகளுக்கு 79 ஓட்டங் களை பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

டினோஷன் களத்தில் இருக்கும் வரை சென். ஜோன்ஸ் அணி கைவசமிருந்த வெற்றி, அவரின் ஆட்டமிழப்பை தொடர்ந்து ஸ்ரீ தேவானந்த கல்லூரி பக்கம் திரும்பியது. எனினும், இறுதி விக்கெட்டுக்காக இணைந்த செல்வதாஸ் சராண் மற்றும் எண்டன் அபிஷேக் ஆகி யோர் தற்காப்பு ஆட்டத்தை வெளிப் படுத்தி, அணியை முழுமையான போட்டித் தோல் வியிலிருந்து காப்பாற்றிக் கொண்டனர். இறுதியில் 47 ஓவர்கள் மாத்திரமே துடுப்பெடுத்தாடியிருந்த சென். ஜோன்ஸ் கல்லூரி 9 விக்கெட்டுகளை இழந்து 235 ஓட்டங்களை பெற் றிருந்த போது ஆட்டம் இடைநிறுத் தப்பட்டு, ஸ்ரீ தேவானந்த கல்லூரிக்கு முதல் இன் னிங்ஸ் வெற்றி வழங்கப்பட்டது.




# இந்தியாவுடனான ரி 20 போட்டி நியூஸிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன்,ஜன.31

இந்திய அணிக்கு எதிரான மூன்று ரி 20 போட்டிக்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் இடையே மூன்று ரி 20 ஓவர் போட்டிகள் நடக்கின்றன. பெப்ரவரி 6, 8 மற்றும் 10ஆம் திகதிகளில் இந்த போட்டி நடக்கிறது.

இதற்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக் கப்பட்டது. டேரியல் மிக்சேல், பிளேயர், டிக்னேர் ஆகிய 2 புதுமுக வீரர்கள் அணியில் இடம் பெற் றுள்ளனர். நியூசிலாந்து அணி வருமாறு:-

வில்லியம்சன் (அணித்தலைவர்), கிரான்ட் ஹோம், பிரேஸ்வெல், டெய்லர், குப்தில், ஸ்காட், டேரியல் மிக்சேல், காலின் முன்ரோ, சான்ட்னெர், சவுத்ரி, ஸ்காட் குக்ஜிலியின், டிம் சிபெர்ட், பெர்குசன் (முதல் 2 போட்டி), பிளேயர் டிக்னெர் (3ஆவது போட்டி மட்டும்)

# இலங்கை கிரிக்கெட் அணியில் பிளவுகள் சீர்செய்யக்கோரி திசர பெரேரா கடிதம்

இலங்கை அணியின் ஒற்றுமை மற்றும் நிலைத் தன் மையை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காக அணியின் தலைமைத்துவத்தில் மாற்றத்தை கொண்டுவர வேண்டும் எனக் கிரிக்கெட் சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வாவுக்கு சகல துறை வீரர் திசர பெரேரா கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

திசர பெரேரா தனது கடிதத்தில் குறிப்பிடுகையில் -

தற்போது அணியானது பிளவுகளுடனான அணியாக உள்ளது. நாம் உலகக் கிண்ண தொடருக்கான விளிம்பில் உள்ளோம். தற்போது எமது நோக்கம் உலகக் கிண்ணத் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான்.



அணியென்ற ரீதியில் எமக்கு நிலையான தலைமைத் துவம் ஒன்று வேண்டும். முக்கியமாக அணியின் உடை மாற்றும் அறையில் வீரர்களி டத்தில் ஒற்றுமை இருக்க வேண்டும். ஆனால், தற்போது சில விடயங்கள் உடைமாற் றும் அறையில் சரியானதாக இல்லை. உலகக்கிண்ணத்துக்கு முன்னர் இந்த விடயங்களை உடனடியாகச் சரிப்படுத்த வேண்டும்.

அத்துடன், நாம் அணியென்ற ரீதியில் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதற்கு அணித் தலைமையும், அனு பவ வீரர்களும் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என வும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு வாரங்களில் வெளிவரும் எனவும், அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மனித புதைகுழியில் அகழ்வுப் பணி நேற்று 135 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது. கடந்த 22 ஆம் திகதி நிறுத்தப்பட்ட அகழ்வு பணி நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் இருந்து 300 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றில் 294 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மனித எலும்புக்கூடுகளில் 6 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு பொதிகள் செய்யப்பட்டு கடந்த 23 ஆம் திகதி கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு, மறுநாள் 24 ஆம் திகதி விமானம் மூலம் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு புளோரிடாவில் உள்ள ஆய்வு கூடத்துக்கு கார்பன் பரிசோதனைக்காக அவை கையளிக்கப்பட்டன. அங்கு மனித எலும்புக்கூடுகளின் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் அறிக்கை இன்னும் இரு வாரங்களில் எமக்குக் கிடைக்கும். அகழ்வுப் பணிகள் தொடரும் – என்றார். (ஐ)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னால் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கச் செய்த வழக்கில், விக்னேஸ்வரன் தரப் பில் கிளப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை மீதான தீர்ப்பை நீதிமன்றம் இன்று வழங்கவிருக்கின்றது.

மாகாண அமைச்சர் பதவியிலிருந்து தாம் விலக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுவது தவறு எனச் சுட்டிக்காட்டி, ஆகவே தம்மைப் பதவியில் தொடர அனுமதிக்கும்படி உத்தரவிடக் கோரி, டெனீஸ்வரன் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் அதை ஒட்டி இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியிருந்தது.

அந்த உத்தரவில் உடனடியாக டெனீஸ்வரன் அமைச்சர் பதவியில் தொடர்வதற்கு ஆவன செய்யுமாறு மன்று பணித்திருந்தது.

ஆனால், தாம் பணியில் தொடர அனுமதிக்கப்படவில்லை என்றும், அந்த நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை உதாசீனம் செய்தமை மூலம் முதல்வர் விக்னேஸ்வரன் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் என்றும் தெரிவித்து டெனீஸ்வரன் மற்றொரு வழக்கைத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரிக்க முடியாது எனத் தெரிவித்து விக்னேஸ்வரன் சார்பில் கிளப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை குறித்து விசாரணை நடத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு ஜனவரி 31ஆம் திகதி வழங்கப்படும் என அறிவித்திருந்தது. அத்தீர்ப்பு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஞானசாரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்குவாராக இருந்தால் அவர் ஒருபக்கச் சார்பில் செயற்படும் இனவாதியாகவே கருதப்படுவார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கவுள்ளார் எனக் கூறப்படுவது தொடர்பாகக் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையும் ஒன்று சேர்த்து நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கான ஏற்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை இருப்பதாக மிகமிக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் அறிய வந்தது.

மாகாணசபைத் தேர்தல்களை ஜூன் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொண்டு வந்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தாலும் –

அத்தேர்தலை பழைய முறைப்படி நடத்துவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

பழைய விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் அத்தேர்தலை நடத்துவதற்கான சட்டமூத்தை மீண்டும் கொண்டு வரும் அதே சமயத்தில் –

அதில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகளைப் புதிதாகச் செருகுவதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளதாம்.

ஆறு மாகாண சபைகளின் பதவிக் காலம் ஏற்கனவே முடிந்து விட்டது. இரு சபைகள் இந்த ஏப்ரலுடன் காலாவதியாகின்றன. எஞ்சிய கடைசி சபையின் பதவிக் காலம் செப்ரெம்பரில் முடிவடைகின்றது.

அதன் பின்னர் ஒன்பது மாகாண சபைகளுக்கும் வேட்பு மனுக்களை கோரி நவம்பரில் அல்லது டிசெம்பரில் – பெரும்பாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுடன் சேர்த்து – ஒரே நாளில் மாகாணசபைத் தேர்தலையும் நடத்தும் வியூகத்தில் ஐ.தே. கட்சி இருப்பதாகத் தெரிகின்றது.

அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

மாகாண சபைத் தேர்தலின் முடிவுகள், ஜனாதிபதித் தேர்தலில் தாக்கம் செலுத்துவதைத் தவிர்க்கும் விதத்திலேயே இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்தும் வியூகத்தை ஐ.தே.கட்சி வகுப்பதாகக் கூறப்பட்டது. (உ)

## மகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸர்தீன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை என்ற இடத்தில் 2008ஆம் ஆண்டு ஜூன் 11ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றது. அந்த இடத்தைச் சேர்ந்த சீனித்தம்பி வசந்தராசா என்ற குடும்பத் தலைவர், தனது மனைவி வீட்டில் இல்லாதவேளை 16 வயதுக்குட்பட்ட தனது மகளை வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிறுமி தாயாரிடம் முறையிட்டுள்ளார். அதனால் சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையுடன், கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்று வழக்கு கோவைகள் சட்ட மா அதிபரிடம் பாரப்படுத்தப்பட்டன.

16 வயதுக்குட்ட சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் குடும்பத் தலைவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் நெறிப்படுத்தினார். விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் வழக்கின் தீர்ப்பை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸர்தீன் நேற்று வழங்கினார்.

மகளை வன்புணர்ந்த தந்தையார் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன், 5 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தைக் குற்றவாளி செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று மேல்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். (ஐ-07)

## இனிமேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடிப்பை வழங்கவேண்டாம் என வலியுறுத்திக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் வவுனியா மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ஐ.நாவே கையில் கொடுத்தவர்களைத் தேட ஓ.எம்.பி அலுவலகம் தேவையா?, ஐ.நாவே இரகசிய சித்தரவதை முகாம்களைக் கண்டு பிடித்து எங்கள் பிள்ளைகளை மீட்டுதா?, சர்வதேச விசாரணை தேவை, ஐ.நாவே இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்காதே? – உள்ளிட்ட வசனங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு காணாமற் போனோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகிய போராட்டம் கடை வீதி வழியாகப் பேரணியாகச் சென்று வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து மீண்டும் பழைய பஸ் நிலையத்தை அடைந்திருந்தது.

எமது கோரிக்கைகளைப் பலமுறை முன்வைத்தபோதும் இதுவரை ஐ.நா மனித உரிமை ஆணையகத்தால் அது நிறைவேற்றப்படாத நிலையில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரிலாவது எங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசுக்குக் காலநீட்டிப்பை வழங்காமல் அழுத்தத்தை கொடுப்பதன் மூலமாக எங்களது உறவுகளுக்கு நீதியானதும், நியாயமானதுமான தீர்வு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் போராட்டத்தில் கலந்து கொண்ட வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயத்துக்கு யார் காரணியாக இருந்தார்களோ அவர்களால் நியமிக்கப்படும் ஆணைக் குழுக்கள் மூலம் எமக்கு நீதியானதும் நியாயமானதுமான தீர்வுகள் கிடைக்கபோவதில்லை எனவும் அவர்கள் மேலும் கூறினர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் பல்கலைகழக மாணவர்கள், கிழக்குப் பல்கலை மாணவர்கள், மதகுருமார்கள், வர்த்தகர் சங்கத்தினர், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## 7,500 லீற்றர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்து சுமார் 7 ஆயிரத்து 500 லீற்றர் எத்தனோல் (தூய மதுசாரம்) கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசாவின் உத்தரவில் நேற்று அழிக்கப்பட்டது.

ஏழாலைப் பகுதியில் நீண்ட காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 371 கான்களில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த சுமார் 7 ஆயிரத்து 500 லீற்றர் எத்தனோல் கடந்த 24 ஆம் திகதி சிறப்பு அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

மல்லாகம் இராணுவத்தினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த எத்தனோல் கைப்பற்றப்பட்டது.

சுன்னாகம் நகரிலுள்ள மதுபானச்சாலை உரிமையாளரால் யாழ்ப்பாண மதுபானச் சாலைகளுக்கு விநியோகிக்கப்படும் பனம் சாரயத்தில் கூடியளவு எத்தனோல் கலப்படம் செய்யப்பட்டுப் பல கோடி ரூபா இலாபம் பெறப்படுவது கண்டறியப்பட்டது.

இந்தக் கலப்படம் செய்யும் சட்டவிரோத நடவடிக்கை கடந்த 2 ஆண்டுகளாக முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. திக்கம் வடிசாலையில் வைத்து இரவு வேளைகளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் லொறி நிறுத்திவைக்கப்பட்டிருந்த காணியின் பராமரிப்பாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லையில் இடம்பெற்றபோதும் யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், சம்பந்தப்பட்ட சுன்னாகம் மதுபானச்சாலை உரிமையாளருக்கும் இடையே நெருங்கிதொடர்புள்ளது என்று தெரிவித்து கிளிநொச்சியிலுள்ள வடக்கு மாகாண மதுவரித் திணைக்களத்தின் அலுவலகத்தில் சந்தேகநபர்கள் கையளிக்கப்பட்டனர். அத்துடன், எத்தனோல் சான்றுப் பொருளும் அங்கு கையளிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் முற்படுத்தப்பட்டு இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுமார் 7 ஆயிரத்து 500 லீற்றர் எத்தனோல் அடங்கிய சுமார் 371 கொள்கலன்கள் நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக பதிவாளர் செல்வி சிவமாலினி மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் உமையாள்புரம் பகுதியிலுள்ள பிரதேச சபையின் கழிவகற்றல் காணியில் ஊற்றி அழிக்கப்பட்டன. (ஐ-07)

## கீரிமலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உறுதியளித்தார்.

கீரிமலை பூர்வீக நிலப்பகுதியின் எல்லைப் பகுதிக்கு நேற்று நேரடியாகக் கள விஜயம் மேற்கொண்டிருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

அந்த விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வலி.வடக்குப் பிரதேசத்தின் விடுவிக்கப்பட வேண்டியிருக்கும் நிலப்பரப்புக்கள் குறித்து ஜனாதிபதியின் விசேட கவனத்துக்கு கொண்டு செல்லப்படும்.

பூர்வீகமாக வழிபட்ட விஷ்ணு ஆலயம், பாரம்பரியமான சுடுகாட்டுப் பகுதி என்பன கீரிமலை பூர்வீகப் பிரதேசத்தினுள் காணப்படுகின்றன எனத் தெரிவித்த மக்கள், அவற்றையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரினர்.

அத்துடன், பொன்னாலை – பருத்தித்துறை வீதியின் 2 கிலோமீற்றர் தூரம் மக்கள் பாவனை இன்றிக் காணப்படுகின்றது.

முக்கியமாக இப்பகுதியில் குடியிருப்புப் பகுதிகளும் உள்ளடங்குவதாக வருகை தந்திருந்த மக்கள் சார்பில் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இப்பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து விரைவில் தீர்வு காணப்படும் – என்றார். (ஐ-07)

## லஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டில் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோதமாக மண் ஏற்றிய லொறியை விடுவிப்பதற்கு 25 ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வந்த லஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினால் பொலிஸ் நிலையத்தில் வைத்து நேற்று மாலை அவர் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பிரதேசத்தில் கடந்த திங்களன்று சட்டவிரோதமாக லொறி ஒன்றில் ஆற்று மண் ஏற்றிக் கொண்டிருந்தவர்களைப் பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இதன்போது லொறியைக் கைவிட்டுவிட்டு லொறி உரிமையாளர் உட்பட மண் ஏற்றியவர்கள் தப்பியோடினர். பொலிஸார் லொறியைக் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

இந்த நிலையில் லொறி உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து லொறியை மீட்பதற்கு முயற்சித்தபோது அவர்களிடம் 25 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகத் தருமாறு கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோரியுள்ளார்.

இதனையடுத்து லொறி உரிமையாளர் லஞ்ச ஊழல் மோசடிப் பிரிவுக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து அவர்களின் வழிகாட்டலில் சம்பவதினமான நேற்று மாலை 5.35 மணியளவில் லொறி உரிமையாளர் 25 ஆயிரம் ரூபாவுடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பணத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வழங்கினார். இதன்போது இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினரால் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார். (ஐ)

## வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 9 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 09 ஆம் திகதிக்கு இடையில் நடைபெறுமென அதில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் ஒக்ரோபர் 22 ஆம் திகதி 2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவை இறுதி செய்ய உள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதே நாளில் தேர்தல்கள் திணைக்களம் தேர்தலுக்கான நியமன தாக்கல் திகதியை அறிவித்தால் அடுத்த நான்கு வாரத்துக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் தேர்தல்கள் திணைக்களம் கூறியுள்ளது. (ஐ)

# தேர்தலைப் பிற்போட சு.கவேதான் காரணம்

## குற்றம் சாட்டுகின்றது ஐ.தே.க.



இதனைக் கூறினார்.

கொழும்பு, ஜன. 31

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளே தேர்தலைப் பிற்போடுவதற்கான காரணமாக அமைந்துள்ளன என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதுள்ள முறைமைக்கு அமையத் தேர்தலை நடத்துமாறு நாம் ஏற்கனவே கோரினோம், ஆனால் அதனைச் சுதந்திரக் கட்சியினர் கேட்கவில்லை.

அப்படிச் செய்திருந்தால் இன்று தேர்தல் நடத்தப்பட்டிருக்கும். எந்த வொரு தேர்தலுக்கும் நாம் தயார். நாம் தேர்தலைக் கண்டு எப்போதும் அஞ்சியதில்லை –என்றார். (ஐ)

# கோட்டாபய களமிறங்கினால் மஹிந்தவுக்கு சாவுமணிதான்!

## அடித்துக் கூறுகின்றார் குமார வெல்கம

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளைப் பங்காளிக் கட்சிகளாகக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்டால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணமும் முடிவுக்கு வந்துவிடும்.

–இவ்வாறு மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இனிமேல் ஜனாதிபதியாக வருவதற்குத் தகுதியற்றவர். பொருத்தமான – வெற்றியை உறுதி செய்யக்கூடிய – நாட்டு மக்களின் மனதை வெல்லக்கூடிய ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ களமிறக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டாபயவைக் களமிறக்க மஹிந்த முடிவெடுத்துள்ளார் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

உண்மையில் கோட்டாபய களமிறங்கினால் படுதோல்வியைச் சந்திப்பார். தமிழ் – முஸ்லிம் மக்கள் அவருக்கு வாக்களிக்கமாட்டார்கள். சிங்கள மக்களிலும் 60 வீதமானோர் அவரை எதிர்ப்பார்கள்.

எனவே, மஹிந்த தனது முடிவை மாற்றியமைக்க வேண்டும். இல்லையேல் மஹிந்தவின் அரசியல் பயணம் முடிவுக்கு வந்துவிடும்.

ராஜபக்ஷ குடும்பத்தில் மஹிந்தவே நல்லவர்; நேர்மையானவர். ஏனையவர்கள் ஊழல், மோசடிகள் மற்றும் கொலைகளுடன் தொடர்புடையவர்கள்.

இப்படியானவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் முழு நாடும் கொதிப்படையும்.

மஹிந்தவின் நல்ல குணத்துக்கு அவர்தான் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும். ஆனால், நாட்டின் தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சகல பங்காளிக் கட்சிகளும் ஒன்றுகூடிப் பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்ய வேண்டும் – என்றார். (ஐ)

# அமைச்சுப் பதவியை பெற தொண்டமான் குறுக்குவழி

## வேலுகுமார் எம்.பி. கடும் அதிருப்தி

கொழும்பு, ஜன. 31

தோட்டத் தொழிலாளர்களை முதலாளிமார் சம்மேளனத்திடம் காட்டிக் கொடுத்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தற்போது பின்கதவால் அரசுக்குள் நுழைந்து அமைச்சுப் பதவியைப் பெறும் குறுக்குவழி அரசியலிலும் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட எம்.பியுமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் துரோகம் இழைக்கப்பட்டுள்ளது என்றும் ஊதிய உயர்வாக வெறும் 20 ரூபாவே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக இருந்துவந்தது.

அதற்கான அரசியல் மட்டத்திலான அழுத்தங்களையும் பிரயோகித்தோம். தொழிலாளர்கள் பக்கம் நின்று அவர்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பினோம். போராட்டங்களையும் நடத்தியிருந்தோம்.

எனினும், அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்காவிட்டால் உடன்படிக்கையில் கைச்சாத்திடமாட்டோம் என வீராப்பு பேசிய ஆறுமுகன் தொண்டமானும், வடிவேல் சுரேஸும் இறுதி நேரத்தில் 'பல்டி' அடித்து 'மெகா' காட்டிக் கொடுப்பை வெற்றிகரமாக அரங்கேற்றியுள்ளனர்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிய தொழிலாளர்களின் அடிவயிற்றில் அடித்துவிட்டு, 20 ரூபா சம்பள உயர்வுக்கு 'ஆமாம்சாமி' போட்டு, கம்பனிகளிடம் முழுமையாகச் சரணடைந்துள்ளனர். இதற்கு பெயர் வரலாற்று வெற்றி அல்ல, பச்சைத் துரோகம் என்றே விளிக்க வேண்டும்.

2016 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நாளொன்றுக்கான மொத்தச் சம்பளமாக 730 ரூபா வழங்கப்பட்டது. இம்முறை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 750 ரூபா வழங்கப்படவுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கான கொடுப்பனவு உள்ளிட்ட கம்பனிகளின் கட்டாய பங்களிப்பைச் சம்பளத்துடன் இணைத்து காட்ட முடியாது.

கூட்டு ஒப்பந்த விவகாரத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே மூன்றாம் தரப்பாக அரசாங்கத்தின் தலையீட்டை நாம் கோரினோம்.

அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா இல்லாத ஒப்பந்தத்தை அலரிமாளிகையில் வைத்துக் கைச்சாத்திடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டமை தவறான முன்னுதாரணமாகும்.

இந்நிகழ்வுக்குப் பிரதமர் தலைமை வகித்திருக்கக்கூடாது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பிரதமரை நேரில் சந்தித்து அதிருப்தியை வெளியிடவும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசின் பங்காளிக் கட்சியாக இருந்தபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சி செய்யும் அனைத்து விடயங்களுக்கும் கைதூக்கும் அளவுக்கு எமது கூட்டணி வங்குரோத்து அரசியலை நடத்தவில்லை.

மக்களுக்குத் துரோகம் – அநீதி இழைக்கப்படுமானால் பதவி, பட்டம் என எல்லாவற்றையும் தூக்கியெறியவும் தயார்நிலையிலேயே நாம் அரசியலை நடத்தி வருகின்றோம்.

அதேவேளை, தொழிலாளர்களைப் பணயம்வைத்து, அரசாங்கத்துக்குள் நுழைந்து அமைச்சுப் பதவியை பெறும் நயவஞ்சக அரசியலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இறங்கியுள்ளது.

அலரிமாளிகைக்குள் நுழைந்து, பிரதமருடன் சிரித்துபேசினால் தமிழ் முற்போக்குக் கூட்டணி பலவீனமடைந்துவிடும் என இ.தொ.கா. நினைக்குமானால் அது அறியாமையின் வெளிப்பாடாகும். – என்றார். (ஐ)

# பளையில் குடிசை தீக்கிரை



யாழ்ப்பாணம், ஜன. 31

பளை, கட்டைக்காட்டுப் பகுதியில் ஏழைக் குடும்பம் ஒன்றின் குடிசை விஷமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காட்டுப் பகுதியில் வசிக்கும் மூன்று பிள்ளைகள் உள்ள குடும்பமொன்றின் வீடே நேற்று அதிகாலை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடும்பம் தமது குடிசை பாதுகாப்பானதாக இல்லாமையால் அருகில் உள்ள அயலவரின் வீட்டில் உறங்குவதே வழக்கம்.

நேற்று முன்தினம் இரவும் அந்தக் குடும்பம் அயல் வீட்டில் உறங்கச் சென்ற பின்னரே நேற்று அதிகாலை அவர்களது குடிசை எரிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர்களது உடைமைகள் அனைத்தும் எரிந்து சாம்பராகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகளைப் பளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ - 07)

# ஆறுமுகனின் 'தந்திரம்'

கொழும்பு, ஜன. 31

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாகக் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், அலரி மாளிகையில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டமை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் சாணக்கியமென அந்தக் கட்சியின் தகவல் மூலமொன்று தெரிவித்தது.

எனவே, இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டதன் மூலம், இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குச் 'செக்' வைத்துள்ளாரெனவும் அந்தத் தகவல் தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பிலும், ஐ.தே.கவுக்கும் அதன் தலைவர் பிரதமர் ரணிலுக்கும், முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தது.

அத்தோடு, கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிரான கருத்துகளையே, அந்தக் கட்சியின் அநேகமானோர் வெளிப்படையாக வெளிப்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், பிரதமர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை, கூட்டணிக்குப் பாதிப்பாக அமையுமென எதிர்பார்ப்பதாக இ.தொ.கா தரப்புகள் தெரிவித்தன.

இந்த ஒப்பந்தம், ராஜகிரியவிலுள்ள முதலாளிமார் சம்மேளனத்திலேயே கையெழுத்திடப்பட விருந்தபோதிலும், அங்கு ஏற்பட்ட எதிர்ப்புகளைப் பயன்படுத்தியே, அலரி மாளிகையில் அதனைக் கைச்சாத்திடும் முடிவு எடுக்கப்பட்டதெனத் தெரிகிறது.

இதற்கான அனுமதி பிரதமர் ரணிலால் வழங்கப்பட்டதும், தமிழ் முற்போக்குக் கூட்டணியை வீழ்த்துவதற்கான சந்தர்ப்பமாக, இ.தொ.கா இதனைப் பயன்படுத்தியதெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில், இ.தொ.காவின் முக்கியஸ்தவர் ஒருவரிடம் வினவியபோது, கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் இனி கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் வாய்திறக்க முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டோம் என மகிழ்ச்சியாகத் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமரின் இந்த நடவடிக்கையால், பிரதமர் மீது அதிருப்தியில் கூட்டணித் தலைமை இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.